Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

www.tamil.com

**வ ழ ங் கு ம்**

# சுபாவின்

# காத்திருக்கிறேன்...

[ இன்டர்நெட்டிற்காக எழுதப்பட்டு
இன்டர்நெட்டில் வெளியிடப்படும் முதல் தமிழ் நாவல் ]



வணக்கம்! இன்டர்நெட்டிற்காக எழுதப்பட்ட முதன்முதல் முழுநீளத் தமிழ் நாவலான சுபாவின் "காத்திருக்கிறேன்..."-ஐ மின்னூலாக வழங்குவதில் tamil.com பெருமையடைகிறது. இன்டர்நெட்டில் வெளியிடப்படும் முதல் தமிழ் நாவலும் இதுவே! சென்ற முறை வெட்கத்தைக் கேட்டால் என்ன தருவாய் என்ற கவிதைத் தொகுப்பை .pdf (Portable Document Format) மின்னூலாக வெளியிட்டபோது உங்களிடமிருந்து மிகப் பெரிய வரவேற்பு கிடைத்தது. அந்தத் தெம்பில் இந்தப் புத்தகத்தை வெளியிடுகிறோம்.

வெட்கத்தைக் கேட்டால் என்ன தருவாய் முன்பே புத்தகமாக வெளிவந்த தொகுப்பு. சுபாவின் இந்த நாவல் tamil.com இணையத்தில் வெளியிடுவதற்காகப் பிரத்யேகமாக எழுதப்பட்டது. இதுவும் தமிழ்ப் புத்தக உலகிலும் இணைய உலகிலும் ஒரு முக்கிய நிகழ்வு என்பதில் சந்தேகமில்லை.

tamil.com e-புத்தகங்களை பிரவுசர் மென்பொருள், ஃபான்ட் போன்ற தொழில்நுட்பப் பிரச்னைகளின் குறுக்கீடு இல்லாமல் பல நல்ல புத்தகங்களை நீங்கள் download செய்து படிக்கலாம்.

இந்தப் புத்தகமும் இனி வரும் புத்தகங்களும் இலவசம்தான். இவற்றை நீங்கள் எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம், எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் விநியோகிக்கலாம். ஆனால் விற்கவோ மாற்றவோ கண்டிப்பாக அனுமதி இல்லை!

எங்கள் மின்னூல் முயற்சியைப் பற்றி உங்கள் கருத்துகளை எங்களுக்கு அனுப்பலாமே!
அனுப்பவேண்டிய முகவரி: **e-books@tamil.com**

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

## tamil.com பற்றி...

உலகத் தமிழர்களை இணையத்தின் மூலம் இணைத்து அவர்கள் ஒருவருடன் ஒருவர் உறவாட, கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள, ஒன்றுகூடி தமிழ்ச் சமுதாயத்தை வளர்க்க வழி செய்வதே எங்கள் நோக்கம். இதற்காக 15 தலைப்புகளில் ஈ-மெயில் விவாத மேடைகளை (mailing lists) உருவாக்கியிருக்கிறோம். இந்த விவாத மேடைகளில் கலந்துகொள்ள உங்களை அழைக்கிறோம். அந்தந்த லிஸ்ட்டுக்கான ஈ-மெயில் முகவரிகளுக்கு வெற்று ஈ-மெயில் அனுப்பினால் போதும். விவரங்கள்:

**Art:** இசை, நாடகம், ஓவியம், சிற்பம், புகைப்படக் கலை - இவற்றின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை விவாதிக்கலாம்.
கலந்துகொள்ள: **art-subscribe@lists.tamil.com**

**Business:** இதில் எல்லா விதமான வர்த்தகங்களைப் பற்றியும் விவாதிக்கலாம்.
கலந்துகொள்ள: **business-subscribe@lists.tamil.com**

**Cinema:** நாலு பாட்டு-நாலு டான்ஸ் சினிமா, லேட்டஸ்ட் ரிலீஸ் முதல் சீரியஸ் சினிமா வரை இந்த லிஸ்ட்டில் பேசலாம்.
கலந்துகொள்ள: **cinema-subscribe@lists.tamil.com**

**Books:** இதில் இலக்கியத்தைப் பற்றி விவாதிக்கலாம். உங்கள் கதை, கவிதை, கட்டுரைகளையும் நீங்கள் இங்கே தாராளமாக அனுப்பலாம்.
கலந்துகொள்ள: **books-subscribe@lists.tamil.com**

**Education:** கல்வி பற்றியும் அதில் இருக்கும் அரசியல் பற்றியும் இங்கே விவாதிக்கலாம். கலந்துகொள்ள: **education-subscribe@lists.tamil.com**

**Fun:** தலை போகிற சீரியஸான விஷயங்களை இங்கே விவாதியுங்கள்!
கலந்துகொள்ள: **fun-subscribe@lists.tamil.com**

**Health:** உடல், மனப் பிரச்னைகள் பற்றி இந்த லிஸ்ட்டில் பேசலாம். ஆலோசனை வழங்கலாம்.
கலந்துகொள்ள: **health-subscribe@lists.tamil.com**

**IT:** கம்ப்யூட்டர், இன்டர்நெட் பற்றி விவாதிக்கலாம்.
கலந்துகொள்ள: **it-subscribe@lists.tamil.com**

**Law:** சட்ட விஷயங்களைப் பற்றி இங்கே விவாதிக்கலாம்.
கலந்துகொள்ள: **law-subscribe@lists.tamil.com**

**Parenting:** குழந்தை வளர்ப்பதில் இருக்கும் சந்தோஷங்களையும் சிரமங்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள்!
கலந்துகொள்ள: **parenting-subscribe@lists.tamil.com**

**Politics:** உள்ளூர் அரசியல், உலக அரசியல், சமூகப் பிரச்னைகள் எல்லாவற்றையும் இந்த லிஸ்ட்டில் விவாதிக்கலாம்.
கலந்துகொள்ள: **politics-subscribe@lists.tamil.com**

**Sex:** செக்ஸ் ரகசியங்கள், அனுபவங்கள், ஜோக்குகளைப் பகிர்ந்துகொள்ளலாம், விவாதிக்கலாம். படங்களுக்கு மட்டும் அனுமதியில்லை!
கலந்துகொள்ள: **sex-subscribe@lists.tamil.com**

**Sports**: என்ன விளையாட்டாக இருந்தாலும் அதைப் பற்றி இங்கே பேசலாம்!
கலந்துகொள்ள: **sports-subscribe@lists.tamil.com**

**Teen:** teen என்று ஒரு வசதிக்காகப் பேர் வைத்திருக்கிறோமே தவிர, இளவட்டங்களுக்கான ஜாலியான, சீரியஸான லிஸ்ட் இது!
கலந்துகொள்ள: **teen-subscribe@lists.tamil.com**

**Women:** பெண்களின் வாழ்க்கை, பெண்களின் பிரச்னைகள் என்று பெண்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மகளிர் லிஸ்ட்டில் பேசலாம்.
கலந்துகொள்ள: **women-subscribe@lists.tamil.com**

**இனி புத்தகத்திற்குள் . . .**

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ ஒன்று ~

**வா**ர்டன் கம்பிகளில் தட்டி சப்தமெழுப்பினார்.

சந்திரமோகன் நிமிர்ந்தான்.

"வா" என்றார் வார்டன். சிறைக்கதவு ஓசையுடன் திறக்கப்பட்டது.

சந்திரமோகன் கல்தரையில் கையூன்றி எழுந்தான். சிறைக் காரிடாரில் அவர் பின்னே நடந்தான்.

சிறை அதிகாரியின் அறையில் சிகரெட் வாசம் நிறைந்திருந்தது. அதிகாரி பழுப்பு நிறக் காகிதம் ஒன்றை அவன் பக்கம் போட்டார்.

"உன்னை விடுவிக்கச் சொல்லி விட்டார்கள்" என்றார்.

சந்திரமோகன் திடுக்கிட்டான்.

விடுதலையா? அதற்குள்ளா? அவனுக்கா?

"நான்கு வருடம் சிறையில் இருந்ததை மறந்து விடாதே. மறுபடி கொலை செய்யக் கிளம்பி விடாதே..."

அதிகாரி அவர் சொன்ன வாக்கியத்தை அவரே ரசித்துப் புன்னகைத்தார். குண்டூசியால் பல் இடுக்குகளை சுத்தம் செய்தபடி, "இனிமேலாவது நல்லவனாக வாழ முயற்சி செய்..." என்று கையசைத்து வெளியேறச் சொன்னார்.

சந்திர மோகன் அந்த பழுப்புக் காகிதத்தைப் பொறுக்கி எடுத்துக் கொண்டான்.

"செய்யாத குற்றத்திற்கு நான்கு வருடம் சிறையில் அடைத்தீர்களே... இந்த நான்கு வருடங்களை எனக்கு யார் திருப்பித் தரப் போகிறீர்கள்?"

ஆத்திரத்துடன், கனல் பறக்கக் கேட்க வேண்டிய கேள்வி. அமைதியான,அழுத்தமான குரலில் கேட்டான். அவரை வணங்கி விட்டு வெளியேறினான்.

# ~ இரண்டு ~

**கா**தம்பரியின் முத்தத்திலிருந்து தன்னை மீட்டுக் கொண்டபோது, பரமேஷ்வரின் மூச்சு இரைத்தது.

"ஹப்பா!" என்றார், நெஞ்சு ஏறி இறங்கி.

"கின்னஸ் போட்டியிலா கலந்து கொள்ளப் போகிறோம்? உன் வேகத்தை என்னால் சமாளிக்க முடியவில்லை..." என்றார், படுக்கையில் புரண்டு.

காதம்பரி கலகலவென்று சிரித்தாள்.

"அதுதான் இருபதுக்கும், ஐம்பதுக்கும் இருக்கும் வித்தியாசம்..." என்று கண்களைச் சிமிட்டினாள். "உங்கள் மனைவியோடு இந்த மாதிரி அனுபவம் எல்லாம் கிடையாதா?"

"அவள் ஒரு பூசணிக்காய். அவளைப் பற்றி ஏன் ஞாபகப்படுத்துகிறாய்? அதற்காக சந்தடி சாக்கில் நீ இருபது, நான் ஐம்பது என்று சொல்லிவிட்டாயே!"

"நான் சொல்லவில்லை... உங்கள் நரை சொல்கிறது. ஐம்பதாக இருந்தால் என்ன? இருபத்தைந்து வயது இளைஞனுடைய ஆசைகள் உங்களுக்குப் போகவில்லையே!" என்று அவள் பொங்கிச் சிரித்தாள்.

"நீ கேட்டவுடனே உனக்காக கெஸ்ட் ஹவுஸ் வாங்கிக் கொடுத்தேன் பார்... அப்படித்தான் கேலி செய்வாய்!"

"கேலி இல்லை, டியர், ஐ லவ் யூ... ஐ லவ் யூ... ஸோ மச்! ஆனால், காதலில் இந்த சீண்டல் கூட இல்லாவிட்டால் எப்படி?" என்று காதம்பரி அவர் மூக்கில் தன் முக்கைத் தேய்த்தபோது -

பரமேஷ்வரின் செல்ஃபோன் சிணுங்கியது. அவளை நகர்த்தினார். போனை எடுத்தார். எண்ணைப் பார்த்தார்.

வீட்டிலிருந்து!

காதம்பரியை நிசப்தமாக இருக்கச் சொல்லி சைகை செய்தார். போனை இயக்கினார்.

"ஹலோ!"

"எங்கேயிருக்கிறீர்கள்?" என்றது அவர் மனைவியின் குரல்.

"க்ளையண்ட் வீட்டில்... இதோ புறப்பட்டுக்கொண்டே இருக்கிறேன்..."

போனை அணைத்தார். காதம்பரியையும்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ மூன்று ~

**கி**ருஷ்ணதாஸ் சுடுநீரில் குளித்துவிட்டு வேட்டியில் இருந்தார். பூஜையறைக்குள் நுழைந்தார். மின் விளக்குகளின் உபயத்தில் சாமி படங்கள் பளீரிட்டன.

பூக்களை எடுத்தார். படங்களின் மீது போட்டார். கண்களை மூடினார்.

"கடவுளே... எனக்கு எல்லாம் நல்லதாக நடக்கவேண்டும்..."

கற்பூரம் கொளுத்தினார். கண்களில் ஒற்றிக் கொண்டார். வெளிப்பட்டார்.

நிமிர்ந்து கடிகாரம் பார்த்தார். இரவு 9 மணி.

போனை எடுத்தார். எண்களைத் தட்டினார்.

"பரமேஷ்வர்... எங்கே இருக்கிறீர்கள்?"

"காரில்" என்று பதில் வந்தது. "வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறேன்..."

"ஒரு அவசர வேலை... இங்கே ஒரு பத்து நிமிடம் வந்துவிட்டுப் போக முடியுமா?"

முடியாது என்று பரமேஷ்வரால் சொல்ல முடியாது என்று கிருஷ்ணதாஸிற்குத் தெரியும். நகரத்திலேயே மிகப் பெரிய கிரிமினல் அட்வகேட்டாக பரமேஷ்வர் கருதப்படலாம். ஆனால் கிருஷ்ணதாஸின் கம்பெனியில் அவர் சட்டக்குழு ஆலோசகர். அதற்காக மிகப் பெரிய தொகை மாதாமாதம் அவருக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

"அவ்வளவு அவசரம் என்றால் வருகிறேன்" என்றார் பரமேஷ்வர்.

"டின்னர் என் வீட்டில்" என்று கிருஷ்ணதாஸ் தொடர்பைத் துண்டித்தார்.

* * *

டின்னர் முடிந்து பிரம்பு ஊஞ்சலில் ஆடிக்கொண்டே கிருஷ்ணதாஸ் பேசினார்.

"பரமேஷ்... என் மகனைத் தெரியும் இல்லையா?"

"அஸ்வின்தானே? அமெரிக்காவிலிருந்து திரும்பி விட்டானா?" என்றார் பரமேஷ்வர், பீடாவை மென்றபடி.

"வந்துவிட்டான். வந்ததும் என்னை சிக்கலில் மாட்டி விட்டான்... ஆபீஸில் ஒரு ஸ்டெனோவிடம் வழிந்திருக்கிறான். அது முற்றிப் போய் படுக்கையறை வரை போய்விட்டது..."

பரமேஷ்வர் மென்று விழுங்கினார். நானும் கூட இப்போதுதான் காதம்பரியின் வீட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்ல முடியுமா?

"அவள் வீடியோ எடுத்துவிட்டாள். மிரட்டுகிறாள்" என்று கிருஷ்ணதாஸ் சொன்னதும்-

பரமேஷ்வர் முகத்தில் மெல்லிய கோபம் வந்தது. "பெண்களுடன் தொடர்பு தப்பு இல்லை... ஆனால் நம் கட்டுப்பாட்டில் அவர்களை வைத்திருக்க வேண்டும்... வீடியோ எடுக்கும் வரை அனுமதிக்கலாமா?"

"நடந்ததை மாற்ற முடியாது. அந்தப் பெண்ணின் முகவரி இது... அவளைப் பேசிக் கழற்றி விடுங்கள்... பணம் பெரிதில்லை... ஆனால் அஸ்வினைப் பற்றி எந்த ஆதாரமும் அவளிடம் மிச்சமிருக்கக் கூடாது..."

கிருஷ்ணதாஸ் ஊஞ்சலிலிருந்து இறங்கினார். சந்திப்பு முடிந்தது என்று அர்த்தம்.

பரமேஷ்வர் எழுந்தார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ நான்கு ~

**ப**ரமேஷ்வரின் கார் அவர் வீட்டு காம்பவுண்டிற்குள் நுழைந்தது. போர்டிகோவில் நிறுத்தத்திற்கு வந்தது. காரிலிருந்து இறங்கினார்.

நிமிர்ந்து சிட்அவுட்டைப் பார்த்தார்.

மாடியில் கைப்பிடிச் சுவரைப் பற்றியபடி அபிதா நின்றிருந்தாள். பரமேஷ்வரின் ஒரே மகள். கல்லூரிப் படிப்பின் இறுதி செமஸ்டரில் இருந்தாள். பரமேஷ்வரின் கார் ஒலி கேட்டதும் பால்கனிக்கு ஓடிவந்து விடுவாள்.

"ஹாய் டாட்!" என்று சிரித்துக் கொண்டே கையசைத்தவளின் சிரிப்பு சட்டென்று உறைந்தது.

"டாடி... என்ன அது?" என்று காரைக் காட்டினாள்.

காரின் பின்கண்ணாடியில் அவள் பார்வை பதிந்திருந்த இடத்தைப் பரமேஷ்வர் பார்த்தார். அதிர்ந்தார்.

**I HAD SEX WITH KADAMBARI**

என்ற வெள்ளிநிற எழுத்துக்கள் பின்கண்ணாடியில் மின்னின.

பரமேஷ்வர் மின்சார சாட்டையால் தீண்டப்பட்டவர் போல் திடுக்கிட்டார். நடுக்கத்தில் பற்கள் கிடுகிடுத்தன. எழுத்துக்கள் அழகாகக் கோர்த்து ஒட்டப்பட்டிருந்தன. அப்படி ஒட்டுவதற்குக் குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது ஆகியிருக்கும்.

யார்... யார்? செய்தது இப்படி? காரை கெஸ்ட் ஹவுஸில் நிறுத்தியிருந்தபோதுதான்.... ஒட்டப்பட்டிருக்க வேண்டும். கார் அலுவலகத்திலோ கிருஷ்ணதாஸின் இல்லத்திலோ வாட்ச்மேன்கள் உண்டு.

"யார் டாடி காதம்பரி?"

"கா... காதம்பரி... அப்படி யாரும் எனக்குத் தெரியாது... எவனோ ஒரு பொறுக்கி இப்படி ஒட்டியிருக்கிறான்..." பரமேஷ்வரின் குரல் கிடுகிடுத்தது. வேக வேகமாக நடந்து அந்த எழுத்துக்களை கிழித்து எடுக்கப் பார்த்தார். முடியவில்லை!

எழுத்துக்கள் கண்ணாடியின் உட்புறத்திலிருந்து ஒட்டப்பட்டிருந்தன! அப்படியானால்... அப்படியானால்... காருக்குள் ஒருத்தன் திருட்டுத்தனமாக நுழைந்து ஒட்டியிருக்கிறான். டிரைவரை அனுப்பிவிட்டு அவரே காரை ஓட்டிப் போனது காதம்பரியை சந்திக்கத்தான். டிரைவர் இல்லாத நேரமாகக் காருக்குள் நுழைந்து...

யார் செய்திருக்க முடியும்? காதம்பரியா? அவளை... அவளை...

"என்னங்க... உங்களுக்கு ஃபோன்..." என்று சொல்லிக் கொண்டே அவர் மனைவி கார்ட்லெஸ் போனை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அவள் இந்த கண்றாவியைப் பார்த்துவிடக் கூடாதே என்று பரபரப்பாக அவர் அவளை நெருங்கினார்.

"யாருங்க காதம்பரி?"

"கா...த...ம்..பரியா?"

"போனில் காதம்பரிதான் பேசுகிறதாய்ச் சொன்னாள்..."

போன் ரிசீவரை வெடுக்கென்று பிடுங்கினார். காதம்பரிக்கு அவ்வளவு திமிர் வந்து விட்டதா?

"ஹலோ!" என்று ரிசீவரில் குரைத்தார்.

"ஹாய் கிரிமினல் லாயர்" என்றது ஒரு ஆண்குரல். "காதம்பரியின் செக்ஸியான குரலை எதிர்பார்த்து வந்தாயா? ஸாரி!"

"யார்... யார் நீ?"

"ஸ்டிக்கர் மேன்..." தொடர்பு அறுந்தது.

"நான்சென்ஸ்" என்றார் பரமேஷ்வர், "எவனோ திமிர் பிடித்தவன்!"

"திமிர் பிடித்தவன் பெயர் காதம்பரியா?"

"ஐயோ... பேசியது ஆண்... பெண் இல்லை"

"என்னிடம் பேசியது பெண் குரல்தான்... அழகாக காதம்பரி என்று சொன்னாளே... லாயர் பரமேஷ்வருடன் பர்ஸனலாகப் பேசவேண்டும் என்று சொன்னாளே!"

"எவனோ கிறுக்குப் பயல் பிராக்டிகல் ஜோக் செய்வதாக நினைத்துக் கொண்டு விளையாடுகிறான்..." என்றார் பரமேஷ்வர், தோற்றுப் போனவராகி.

"டாடி... இதை அப்படியே விடக்கூடாது... உடனே போலீஸிற்குச் சொல்லுங்கள்.." என்று மூச்சிரைக்க வந்து நின்றாள் அபிதா.

"போலீஸ்!... யெஸ் போலீஸ்..." என்று பரமேஷ்வர் சற்றுத் தடுமாறினார். "டோண்ட் ஒர்ரி. இதை கவனிக்க வேண்டியபடி நான் கவனித்துக்கொள்கிறேன்..."

அவரால் மகளின் விழிகளைப் பார்த்துப் பேச முடியவில்லை.

"சரி, சாப்பிட வாருங்கள்... உங்களுக்காகக் காத்திருக்கிறேன்" என்றாள், மனைவி.

"இல்லை, ஜானகி... கிருஷ்ணதாஸை சந்திக்கப் போயிருந்தேன்... அங்கே டின்னர் முடிந்து விட்டது" பரமேஷ்வர் பேச்சு திசை மாறியதே என்று வெகுவாக சந்தோஷப்பட்டார். ஆனாலும் காதம்பரி... காதம்பரி என்று நெஞ்சுக்குள் ஒரு வண்டு குடைய ஆரம்பித்தது.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ ஐந்து ~

**ப**ரமேஷ்வர் காரின் உள்விளக்குளைப் போட்டார். பின் இருக்கையில் மண்டியிட்டு அமர்ந்தார். கத்தியால் அந்த ஸ்டிக்கர் எழுத்துக்களை ஒவ்வொன்றாக சுரண்டி எடுக்கத் துவங்கினார்.

லட்சம் லட்சமாக சொத்து வைத்திருந்தாலும், எந்த வேலைக்காரனையும் நம்பி இந்த பொறுப்பைக் கொடுக்க முடியாது.

இரவு தூக்கம் முற்றிலும் வீணாகி விட்டது. காதம்பரியா இப்படிச் செய்தாள்? காதம்பரியா? அவளுக்கு தனியே ஒரு வீடு வாங்கித் தரும் அளவிற்கு மயங்கி விட்டதாகக் காட்டிக் கொண்டிருக்கக் கூடாதோ? செல்ஃபோன் சிணுங்கியது.

"தூங்கவில்லை?" என்று சிரித்தது மறுமுனை.

"யார் நீ?"

"அணுகுண்டு! இன்றைக்குத் தூங்கிவிடு நண்பா. நாளைக்கு இதைவிட மோசமான நிலைமையில் தூக்கமே வராது!"

"ஏய்... என்ன நினைத்..."

மறுமுனை அறுந்து விட்டது. பரமேஷ்வரின் அடி வயிற்றில் முதன் முறையாக அச்சம் கொப்புளித்தது. அவருடைய பல வருட வக்கீல் வாழ்வில் எத்தனையோ எதிரிகளை சந்தித்திருக்கிறார். சமாளித்திருக்கிறார். அதெல்லாம் தொழில் முறையில் எழுந்த சவால்...

ஆனால் இந்த ஸ்டிக்கர் மேன் முகம் தெரியாத எதிரியாய் ஒளிந்திருக்கிறான். அடுத்த தாக்குதல் எங்கிருந்து - எப்படி வரும் என்று புரியாத குழப்பம்! மகள் அபிதாவை ஒருவாறு சமாளித்து விட்டார். ஆனால் அவர் மனைவி ஜானகியை சமாளிக்கும் முன் உப்புத் தண்ணீர் குடித்து விடுவார் போலிருந்தது.

* * *

மறுநாள் -

பரமேஷ்வர் தன் அலுவலகத்தில் ஸ்டெனோவிடம் ஒரு கடிதம் டிக்டேட் செய்து கொண்டிருந்தபோது போன் ஒலித்தது.

"ஹாய் பரமேஷ், சௌக்கியமா?" - அதே ஆண் குரல்!

"ஏய் யார் அது?"

அவர் குரலில் இருந்த ஆத்திரம் அங்கே நின்ற ஸ்டெனோவை நிமிர வைத்தது. அவளை வெளியேறிவிடும்படி சைகையாலேயே சொன்னார்.

"நான் யார் என்று விளக்கமாய்ச் சொல்ல இது நேரமில்லை... ஏனென்றால் உனக்கு வீட்டிலிருந்து போன் வர வேண்டியிருக்கிறது. மனைவியோடு பேசி முடி.."

தொடர்பு துண்டிக்கப்பட்டதும், சில நொடிகளிலேயே போன் ஒலித்தது.

"யெஸ்"

"உடனே வீட்டுக்கு வாருங்கள்..." என்றது அவர் மனைவியின் குரல். கோபமும், அழுகையும் அந்தக் குரலில் ஒலித்ததும், பரமேஷ்வர் அவசரமாக எழுந்தார்.

* * *

பரமேஷ்வரின் வீடு. படுக்கையறை. மெல்லிய ஏ.ஸி.

டெலிவிஷன் ஆன் செய்யப்பட்டது. வி.சி.ஆர். இயக்கப்பட்டது.

மனைவியின் அருகில் நகத்து நுனியைக் கடித்துக் கொண்டு பரமேஷ்வர் உட்கார்ந்திருந்தார். தொலைக்காட்சித் திரையையே பார்த்தார்.

இருட்டில் இரண்டு வெளிச்சப் புள்ளிகள் பெரிதாகி ஒரு கார் காட்சிக்குள் வந்தது. அவருடைய கார்!

காரின் முன்விளக்கு வெளிச்சத்தைத் தவிர்த்து, கேமரா கதவருகில் முகாமிட்டது.

கார்க்கதவு திறந்து பரமேஷ்வர் இறங்கினார். சிறு சென்ட் பாட்டில் எடுத்து சட்டைக்குள்ளும் பூசிக்கொண்டார். கேமிரா அவரைத் தொடர்ந்தது. காதம்பரிக்காக அவர் வாங்கிக் கொடுத்த கெஸ்ட் ஹவுஸின் முகப்பில் கேமிரா தயங்கியது.

பரமேஷ்வரின் அடிவயிற்றில் தவளைகள் தள்ளின. கதவு திறந்து காதம்பரி அங்கு நின்றாள். அவரைப் பார்த்ததும், அவள் முகம் குபீரென்று பூத்தது. ஒரு தாவு தாவி அவரை அணைத்துக் கொண்டாள். பரமேஷ்வர் அவள் கன்னத்தில் முத்தமிட்டு அணைத்தபடி உள்ளே நகர கதவு சாத்திக் கொண்டது.

தொலைக்காட்சித் திரையில் வெளிச்சம் குறைந்தது. பளீரிடும் எழுத்துக்கள் உயிர் பெற்றன.

இந்தக் காஸெட்டின் தொடர்ச்சியைப் பார்க்க விருப்பமா? நாளை வரை காத்திருங்கள் - அன்புடன் நான்!

"என்ன அர்த்தம் இதற்கு?" - மனைவியின் குரல் பல டெஸிபல்கள் உயர்ந்தது.

"ஜானு... இதெல்லாம் பொய்..."

"உங்கள் கார் பொய், உங்கள் முகம் பொய். அந்தப் பெண்ணிற்கு முத்தம் கொடுத்தது பொய். அப்படித்தானே?"

பரமேஷ்வர் அவளை அயராமல் பார்த்தார். "என் முட்டாள் மனைவியே... இன்றைக்கு சினிமாவில் என்னென்னவோ டெக்னிக் வந்து விட்டது... நான் வேறு எங்கோ போனதை வீடியோவில் பதிவு செய்து யாரோ ஒரு பெண்ணுடன் இருப்பது போல் சேர்த்திருக்கிறான்..."

"யார்?"

"அவன் யாரென்றுதான் நானும் தேடிக்கொண்டிருக்கிறேன்" அவர் பற்களை நறநறத்தார். "இதையெல்லாம் நம்பாதே! காதம்பரி என்று யாரையும் எனக்குத் தெரியாது... உன் மேல் சத்தியம்!"

அவர் மனைவி ஜானகி அவரை நிமிர்ந்து பார்த்தாள். "சத்தியம் செய்வதாய் இருந்தால், என் மீது செய்யாதீர்கள்... நம் மகள் அபிதா மீது சத்தியம் செய்யுங்கள்..."

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

பரமேஷ்வர் அதிர்ந்தார். அபிதாவின் மீது அவருக்கு உயிர் என்று அவளுக்குத் தெரியும். மடக்கிவிட்டாள். அவருடைய தொழிலிலேயே மடக்கப்பட்ட சந்தர்ப்பங்களைக் கண்டு மிரண்டதில்லை. இப்போது எதற்கு இந்த மிரட்சி?

"அபிதா மீது சத்தியம் செய்தால்தான் நம்புவாய் என்றால் உனக்கு என் மீது சந்தேகம் அழுத்தமாய் விழுந்திருக்கிறது. அபிதா மீது சத்தியம் பண்ணினாலும், அந்த சந்தேகம் தீரப் போவதில்லை. அப்பேர்ப்பட்ட சத்தியம் பண்ண நான் தயாராயில்லை..."

குரலில் கோபத்தை சேர்த்துக் கொண்டார். கண்களில் எரிச்சலைக் காண்பித்தார். வார்த்தைகளில் அழுத்தம் சேர்த்தார். மொறுமொறுவென்று பொறிந்தார். அவளுடைய பிரதிபலிப்பிற்காகக் காத்திருக்காமல் வெளியேறினார்.

காரில் பயணம் செய்தபோது, செல்போனைப் பயன்படுத்தினார். காதம்பரியைப் பிடித்தார்.

"காதம்பரி, இன்னும் அரைமணி நேரத்தில் நீ ஹோட்டல் பாண்டியாவில் இருக்க வேண்டும்... உன்னுடன் நான் பேச வேண்டும்..." என்றார். அவள் பதில் சொல்லுமுன் தொடர்பைத் துண்டித்தார்.

# ~ ஆறு ~

**ஹோ**ட்டல் பாண்டியா.

கிரிமினல் அட்வகேட் பரமேஷ்வருக்கு என்று நிரந்தரமாக அங்கே ஒரு 'சூட்' எடுத்திருந்தார் கிருஷ்ணதாஸ்.

அந்த சூட் (SUITE)

குளிர் சாதன கருவிகள் இயங்கிக் கொண்டிருந்தன. சாய்வாய் அமரக்கூடிய பிரம்பு நாற்காலிகள். மெத் மெத் என்ற குஷன்களுடன் சோபாக்கள். நீர் நிரப்பிய தண்ணீர் மெத்தை.

இது வரை சில முக்கியமான கிளையண்ட்டுகளுடன் மட்டுமே அந்த அறைகளைப் பயன்படுத்தியிருந்தார் பரமேஷ்வர். முதன் முறையாக அவருடைய தனிப்பட்ட உபயோகத்திற்காக வந்திருக்கிறார்.

அவருக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்திருந்தாள் காதம்பரி.

தொலைக்காட்சியில் அந்த வீடியோ படம் ஓடி முடிந்திருந்தது. காதம்பரி குளிரூட்டும் கருவிகளால் பயனின்றி, நிறைய வியர்த்திருந்தாள். கண்களில் அச்சம், குழப்பம்.

"சத்தியமாக இந்த வீடியோ எப்போது எடுக்கப்பட்டது, எப்படி எடுக்கப்பட்டது, யாரால் எடுக்கப்பட்டது என்று எனக்கு எதுவுமே தெரியாது..."

அவள் குரல் நடுங்கியது.

"உன் அனுமதியோ, ஒத்துழைப்போ இல்லாமல் வேறு யாரால் இப்படி அந்தரங்கமாக எடுக்க முடியும்?" பரமேஷ்வர் அதிரடிக்கும் குரலில் கேட்டார்.

"யார் மீது வேண்டுமானாலும் சத்தியம் செய்கிறேன்... எனக்குத் தெரியாது..."

"சத்தியம்!" பரமேஷ்வர் நக்கலாகச் சிரித்தார். "என் சத்தியங்களே இங்கு விலை போகவில்லை. உன் சத்தியங்களுக்கு நயா பைசா கூட கிடைக்காது"

அவர் குரலைப் பறிப்பது போல் செல்போன் ஒலித்தது. எண்களைப் பார்த்தார். அவருக்கு பழக்கமில்லாத ஒரு தொலைபேசியிலிருந்து இந்த கால் வருகிறது என்பது புரிந்தது. இயக்கினார்.

"ஹாய் பரமேஷ்! காதம்பரியும் படம் பார்த்தாளா?" அந்த ராஸ்கல்தான்!

"பரம்ஸ்... அந்தப் பெண்ணைப் போட்டுக் குடையாதே பாவம், காதம்பரிக்கு எதுவுமே உண்மையில் தெரியாது... உனக்கு முழு காஸெட்டும் வேண்டுமா?"

"யார் நீ?"

"ஒரு வியாபாரி... காஸெட்டை நீ வாங்கிக் கொள்கிறாயா அல்லது தனியார் சானல் எதற்காவது விற்று விடட்டுமா?"

"ஏய்!"

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"பரமேஷ்வரின் படுக்கையறை... தலைப்பு கூட நன்றாகயில்லை?"

"உனக்கு என்ன வேண்டும்? ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்?"

"பணம்... எவ்வளவு வழக்குகளில் பொய்யை உண்மை போல் தோன்றச் செய்து சம்பாதித்திருப்பாய்... அதிலிருந்து கொஞ்சம் பணம்..."

"எவ்வளவு?"

"இருபத்தைந்து லட்சம்"

"வ்வ்வாட்! உனக்கென்ன பைத்தியமா? அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவேன்?"

"பணமா? கௌரவமா?"

"இரண்டு லட்சம் தருகிறேன்... என்னுடைய சேமிப்பு அவ்வளவுதான் இருக்கும்..."

"இருபத்தைந்து எங்கே? இரண்டு எங்கே?"

"என்னால் அதற்கு மேல் தர முடியாது..."

"முதல் தடவை என்பதால் ஒத்துக் கொள்கிறேன்... பணத்தை நாளைக்குள் தயார் செய்..."

"ஒரிஜினல் கேசட்டுடன் நான் சொல்லும் இடத்திற்கு நீ வரவேண்டும்.." என்று பரமேஷ்வர் சொன்னதும், அவன் வாய்விட்டு சிரித்தான்.

"என்னைக் கிறுக்கன் என்று நினைத்தாயா - நீ சொல்லும் இடத்திற்கு வந்து மாட்டிக் கொள்ள? எங்கே சந்திப்பது என்பதை நாளைக்கு நான் சொல்கிறேன்..." சிரித்துக்கொண்டே எதிர்முனை தொடர்பு அறுந்தது.

"என்னவாம்?" என்றாள் காதம்பரி.

"ஒரு - இல்லை" என்று அச்சிட முடியாத வார்த்தையில் ஆத்திரப்பட்டார், பரமேஷ்வர்.

# ~ ஏழு ~

**ம**றுநாள் -

அபிதா கல்லூரியிலிருந்து சிரித்துக் கொண்டே வெளிப்பட்டாள். கடைசி வகுப்பில் நடந்த கலாட்டாக்களை மனம் அசை போட்டுக் கொண்டிருந்ததால் அந்த சிரிப்பு. கல்லூரியின் கார் பார்க்கிங் பகுதிக்கு வந்தாள். அவளுடைய ஸென்னின் மீது சில இலைக் குப்பைகள் சேர்ந்திருந்தன.

காரில் ஏறி அமர்ந்தாள். தோழிகளுக்குக் கையசைத்துவிட்டு சீறலாக வெளியே வந்தாள். காரை வெகு வேகமாக ஓட்டுவது என்பது அவளுக்கு மிகப் பிடிக்கும். எந்த போலீஸ்காரனும் தடுத்து நிறுத்த முடியாது. அப்படியே நிறுத்தி மடக்கினாலும், கிரிமினல் லாயர் பரமேஷ்வரின் மகள் என்ற துருப்புச்சீட்டு உடனே அவளிடம் மரியாதை காட்ட வைத்துவிடும்.

கார் சீறிக்கொண்டு விரைந்தது. கடற்கரைச் சாலையில் கார் நுழைந்தபோது பின்னால் ஏதோ அசைவு தெரிவதுபோல் அவள் உணர்ந்து தயாராவதற்கு முன்னால் ஒரு உலோக வட்டம் அவளுடைய பின்னால் கழுத்தில் பதிந்தது.

"அபிதா" குரல் அமைதியாக வந்தது. கண்ணாடியைத் திருப்பி பின்னால் இருந்தவன் முகத்தை அவள் பார்த்தாள். கன்னத்தை மறைத்துத் தாடி ஒட்டியிருந்தான். கண்களை மறைத்து கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். தாடிக்குள்ளிருந்த உதடுகள் புன்னகைக்காக வளைந்தன. பற்கள் பளீரிட்டன.

"அபிதா... உன் கழுத்தில் பதிந்திருப்பது ஒரு ரிவால்வர் முனை. நீ புத்திசாலி. கிரிமினல் லாயரின் மகள். அதனால் நைஸாக ஸெல்போனை எடுத்து அப்பாவின் எண்களை அழுத்தி அவரைப் பதறச் செய்யலாம்... காரை எங்காவது கொண்டு இடித்து என்னை நிலைகுலைக்கலாம். இன்னும் என்னன்னவோ செய்யலாம்... அதற்கு பதிலாக எனக்காக நீ சில மணி நேரங்கள் மட்டும் செலவு செய்தால் போதும்... உனக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் நானே திருப்பிக் கொண்டு விட்டுவிடுவேன்..." அவன் குரல் அன்பாக இருந்தது.

அபிதாவின் முதல் உணர்ச்சி அச்சம். அடுத்த உணர்ச்சி விறைப்பு. கடைசியாக அவன் பேசி முடித்தபோது, எல்லாம் அடங்கி அவன் சொன்னதில் ஒரு ஆர்வம் கூட வந்துவிட்டது.

"யார் நீ?" என்றாள்.

"என் பெயர் சந்திரமோகன். என்னைப் பற்றிய மிச்ச விவரங்களையெல்லாம் உடனே கேட்காதே... இப்போது சொன்னால் உனக்கு ஆர்வம் இருக்காது..."

"எப்போது கேட்க வேண்டும்?"

"இன்னும் மூன்று மணி நேரம் கழித்து..."

"அது வரை நான் இப்படியே கார் ஓட்டிக் கொண்டு இருக்க வேண்டுமா?"

"இல்லை... நாம் ஹோட்டல் ஒன்றிற்குப் போகிறோம். அங்கே ஒரு அறை எடுத்திருக்கிறேன்..."

அபிதாவின் முகம் சுருங்கியது. பார்த்து அவன் புன்னகைத்தான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"என்னைப் பற்றி தவறான கற்பனை வளர்த்துக் கொள்ளாதே... நான் கண்ணியமானவன். அந்த அறையில் நாம் காத்திருக்றோம். நமக்குப் பொதுவான ஒரு நண்பர் வருவார். அவர் வந்து போனதும் நீ புறப்படலாம்."

"நீ சொல்லும்படியெல்லாம் நான் செய்யவில்லை என்றால்?" அபிதா சவால் விடும் குரலில் கேட்டாள்.

"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே நீ புத்திசாலி. சாமர்த்தியசாலி. உன்னை என்னால் அடக்க முடியாது. கட்டுப்படுத்த முடியாது. நீ நினைத்தால் தப்பிக்கலாம். ஆனால் உன் வாழ்க்கையில் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தைக் கடைசி வரை தெரிந்து கொள்ளாமலேயே போய் விடுவாய்."

"என்ன விஷயம்?"

"யாரைப் பற்றி என்று சொல்கிறேன்... அப்புறம் நீயே முடிவு செய்..."

"யாரைப் பற்றி?"

"கிரிமினல் லாயர் பாரமேஷ்வரைப் பற்றி..."

"அப்பாவைப் பற்றி என்ன?" அவள் குரல் கூர்மையாக வந்தது.

""உன் அப்பாவுக்கு உன்னால் ஆபத்து என்றால் ஒத்துக் கொள்வாயா?"

"மாட்டேன்."

"அப்படியானால் - மேற்கொண்டு எதுவும் கேட்காமல், வா... நீ கேட்டால் பரமேஷ்வருக்கு ஆபத்து..."

அவள் கழுத்தில் பதிந்திருந்த ரிவால்வரைக் கூட அவன் விலக்கி விட்டான். அபிதாவிற்கு ஆச்சரியமாயிருந்தது.

"எந்த ஹோட்டல்?" என்றாள்.

* * *

பரமேஷ்வர் டிரைவரைத் தவிர்த்திருந்தார். இருபது நிமிடங்களுக்கு முன்னால் ஒரு போன் வந்தது. 'அவன்'தான் பேசினான்.

"ஹாய் பரமேஷ்... பணம் ரெடியா?"

"ரெடி..."

"இன்னும் பதினைந்து நிமிடங்களில் ஹோட்டல் கன்யாவில் உன்னை எதிர்பார்க்கிறேன். தனியே வா... போலீஸ் அல்லது வேறு சாகசம் செய்யப் பார்த்தால் காஸட் தனியார் சானலுக்குப் போவதைத் தவிர்க்க முடியாது..."

"ஹோட்டல் கன்யாவின் பாதாள பார்க்கிங் பகுதியில் தன் லான்ஸர் காரைக் கொண்டு செருகினார். பணப் பெட்டியை எடுத்துக் கொண்டார். அவன் குறிப்பிட்ட அறை எண்ணைத் தேடிப் போனார்.

யார் அவன் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவரை செலுத்தியது. காஸெட் கைக்கு வந்ததும் அவனை எப்படிக் கையாள வேண்டும் என்று அவர் தீர்மானிக்கத் தயாராயிருந்தார்.

* * *

சந்திரமோகன் வார்த்தை தவறவில்லை. அறைக்குள் நுழைந்ததிலிருந்து அவன் விரல் நுனி கூட அபிதாவின் மீது படவில்லை. அவளுடைய அப்பாவிற்கு அவன் போன் செய்தபோதும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள். அவரிடம் அவன் எதற்காகப் பணம் கேட்கிறான்? ஏதாவது பிளாக்மெயிலா? அப்படியானால் அவளுடைய அப்பாவிற்கு ஒரு ரகசியப் பக்கம் இருக்கிறதா?

அறையின் ஒரு பக்கம் குறுக்கே ஒரு திரை இழுக்கப்பட்டிருந்தது. கறுப்புத் துணியால் செய்யப்பட்ட திரை. அந்த அறையில் அது புதிதாகக் கொண்டுவந்து பொருத்தப்பட்டது போல் இரண்டு ஜன்னல்களுக்குக் குறுக்கே நைலான் கயிறு கட்டப்பட்டு திரை தொங்கவிடப்பட்டிருந்தது.

சந்திரமோகன் ஒரு நாற்காலியை அந்தத் திரைக்குப் பின்னால் கொண்டு போட்டான்.

"அபிதா - நீ இங்கே உட்கார வேண்டியிருக்கும்..."

"ஏன்?"

"அறைக்கு வரும் நம் பொது நண்பருக்கு இங்கு நீ இருப்பது தெரியக்கூடாது... அதனால் திரைக்குப் பின்னே இருட்டாக இருக்கும்... ஆனால் அங்கேயிருப்பது அந்தப் பொது நண்பரை நீ பார்க்க வசதி இருக்க வேண்டும். அதற்காக இந்தப் பக்கம் வெளிச்சம் இருக்கும்..."

"எதற்காக இத்தனை ஏற்பாடு?"

"இன்னும் சிறிது நேரத்தில் இந்தக் கேள்விக்கான விடை உனக்கு தானாகத் தெரிந்துவிடும்"

"இன்னொரு கேள்வி..."

"கேள்..."

"இரண்டு நாட்களுக்கு முன் என் அப்பாவின் கார் கண்ணாடியில் அசிங்கமான ஒரு வாக்கியம் ஸ்டிக்கராக ஒட்டப்பட்டிருந்தது. அதை ஒட்டியதும் நீதானா?"

"உனக்கு என்ன தோன்றுகிறது?"

"நீதான்... இன்றைக்கு என் ஸென் காருக்குள் நுழைந்ததும் நீதான். பூட்டிய கார்களுக்குள் நுழைய உனக்குத் தெரிந்திருக்கிறது. என் அப்பாவின் காருக்குள்ளும் நீதான் நுழைந்திருப்பாய்..."

அவன் சிரித்தான். "அப்படியே இருக்கட்டும்" என்றான்.

"எதற்காக அப்படி ஒரு ஸ்டிக்கர் ஒட்டினாய்?"

"இந்தக் கேள்விக்கும் இன்னும் சிறிது நேரத்தில் விடை கிடைத்துவிடும்..." என்றான் அவன். அவள் திரைக்குப் பின்னால் நாற்காலியில் அமர்ந்ததும், "உனக்குப் பிடிக்காத ஒரு காரியத்தை இப்போது செய்ய வேண்டியிருக்கிறது" என்று ஒரு நீளமான நைலான் கயிற்றை எடுத்தான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

அபிதா அவனை சந்தேகமாக நிமிர்ந்து பார்த்தாள்.

"இது எதற்கு?" என்றாள்.

"உன்னை இந்த நாற்காலியோடு கட்டிப் போடுவதற்கு..."

அபிதாவின் கண்களில் கோபம் கனன்றது. "உனக்கு இவ்வளவு ஒத்துழைப்பு கொடுத்த பின்பும் கட்டிப் போட வேண்டுமா?"

"நம் விருந்தாளி வந்திருக்கும்போது நீ நிச்சயம் கட்டுப்பாட்டை இழக்கக்கூடும்... எழுந்து வந்து விடுவாய் என்ற பயம் எனக்கு இருக்கிறது. தயவு செய்து என்னை வற்புறுத்த வைக்காமல் இதற்கும் ஒத்துழைப்பு கொடு."

அபிதா முழு சம்மதம் இல்லாமல் ஆனால் வேறு வழியில்லாமல் நாற்காலியில் அமர்ந்தாள். சந்திரமோகன் நைலான் கயிற்றால் வலிக்கார அளவிற்கு தளர்வாகவும், அவிழ்க்க முடியாத அளவிற்கு இறுக்கமாகவும் அவளை நாற்காலியுடன் கட்டினான். அறையின் அழைப்பு மணி ஒலித்ததும், அபிதா சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் ஒரு கைக்குட்டையை பந்தாகச் சுருட்டி அவள் வாய்க்குள் அடைத்தான். அபிதா அவனை ஆத்திரத்துடன் விழித்துப் பார்த்தாள். அவன் பார்வையாலேயே மன்னிப்புக் கேட்டான். திரையை சரியாக இழுத்து விட்டான். அறைக் கதவைத் திறந்தான்.

# ~ எட்டு ~

**ப**ரமேஷ்வர் அறைக் கதவைத் திறந்தவனை ஏறிட்டுப் பார்த்தார். தாடியும் கறுப்புக் கண்ணாடியும் அவனுடைய உண்மையான அடையாளத்தை மறைப்பதற்காகத்தான் என்று தோன்றியது.

"வெல்கம்" என்றான் சந்திரமோகன், புன்னகைத்து. "எப்பேர்ப்பட்ட பிஸியான லாயர் நீங்கள்... பெரிய பெரிய புள்ளிகள் காரைப் போட்டுக் கொண்டு நீங்கள் கூப்பிட்ட இடத்திற்கு ஓடிவந்து தவம் இருக்கிறார்கள். நீங்கள் இந்த ஏழையின் அழைப்பை ஏற்று இங்கே வந்திருப்பதற்கு நன்றி..."

"உன் குப்பைப் பேச்சுக்களைக் கேட்க நான் வரவில்லை..." என்று உறுமினார், பரமேஷ்வர். "எங்கே காஸெட்?"

"உட்காருங்கள்... காஸெட்டில் என்ன இருக்கிறது என்று முழுசாகப் பார்க்காமல் அவசரப்பட்டு பணத்தைக் கொடுத்துவிட்டு அப்புறம் வருத்தப்படாதீர்கள்..." அவன் காட்டிய குஷன் நாற்காலியில் அவர் கோபத்தோடு அமர்ந்தார். பணத்தைக் கொண்டு வந்திருந்த சிறு பெட்டியைத் தன் மடியில் வைத்துக்கொண்டார்.

அவன் வி.சி.ஆர்.-ஐ இயக்கினான்.

* * *

கறுப்புத் திரைக்குப் பின்னே அமர்த்தப்பட்டிருந்த அபிதாவின் கண்கள் அகலமாக விரிந்தன. தொலைக்காட்சிப் பெட்டியின் திரையில் விரிந்த காட்சிகள் அவளைப் புரட்டி எடுத்தன.

எவளோ ஒருத்தியுடன் பரமேஷ்வர்! அவளுடைய அப்பா! அவளுடைய குருவாக, தெய்வமாக இன்னும் எத்தனையோ சிறப்புகள் கொண்டவராக நினைத்திருந்த அப்பாவா இப்படி...?

அபிதாவின் வயதை ஒத்த பெண்ணை மகளாகப் பார்க்காமல் எப்படி இந்த அப்பாவால் இவ்வளவு கேவலமாக நடந்து கொள்ள முடிகிறது?

சந்திரமோகன் அவளைக் கட்டிப் போட்டதற்கான காரணம் இப்போது புரிந்தது. இல்லையென்றால், நிச்சயம் எழுந்து போய் பரமேஷ்வரின் சட்டையைப் பிடித்து அவள் உலுக்கியிருப்பாள்.

* * *

சந்திரமோகன் வி.சி. ஆர்.-ஐ நிறுத்தினான். "தப்பான கோணத்தில் உட்கார்ந்து படம் எடுக்க வேண்டியிருந்தது. அதனால் நீங்கள் எதிர்பார்த்த அளவு சிறப்பாக படம் வரவில்லை... ஸாரி" என்று அவன் கேலியான புன்னகையுடன் சொன்னபோது - பரமேஷ்வர் அதிர்ச்சியின் உச்சத்தில் இருந்தார்.

தன்னை மறந்து இவ்வளவு பாசமாகவா காதம்பரியுடன் நடந்து கொண்டிருக்கிறார்? இந்த காஸெட்டை அவர் மனைவியோ மகளோ பார்க்க நேர்ந்தால் அவர் மரியாதை என்ன ஆகும்?

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

கிருஷ்ணதாஸ் அவரை அழைத்து தன் மகன் ஒரு ஸ்டெனோவுடன் இருந்ததாகவும், அந்த வீடியோவை வைத்து அவர்கள் மிரட்டுவதாகவும் சொன்னபோது பரமேஷ்வர் என்ன சொன்னார்?

'பெண்களுடன் தொடர்பு இருந்தால் கூட, வீடியோ எடுக்கும் அளவிற்கு தன்னை இழந்து அவர்களை அனுமதிக்கலாமா?' என்று கேட்டாரே... இப்போது அவரே அந்த அசிங்கத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாரே, யாரிடம் போய் நொந்து கொள்வது? பரமேஷ்வர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டார்.

"இந்தக் காஸெட்டிற்கு வேறு பிரதி இல்லையே?" என்றார்.

"இப்போதைக்கு இல்லை" என்றான், சந்திரமோகன். "வேண்டுமென்றால் இன்னொரு தடவை நேரடியாக எடுத்துவிட்டுப் போகிறேன்..." அவன் கண்களில் குறும்பு கொப்பளித்தது.

"காதம்பரி உனக்கு எவ்வளவு கொடுத்தாள்?" என்றார் பரமேஷ்வர், சற்றே ஆத்திரத்துடன்.

"காதம்பரி பாவம்... அவளைப் பொறுத்த வரை நீங்கள் வசதியுள்ள ஒரு முதலை... சின்னச் சின்ன மீன்களை, மான்களை, அப்பாவி மனிதர்களை முழுங்கி ஏப்பம் விடும் ஒரு முதலை. உங்கள் முதுகில் சவாரி செய்யும் ஆசை மட்டும்தான் அவளுக்கு... நான் இந்தப் படம் எடுத்தது பற்றி அவளுக்குக் கொஞ்சமும் தெரியாது... காதம்பரி இல்லாமல் காயத்ரியாக இருந்தாலும் எனக்கு வித்தியாசம் இல்லை... எனக்குத் தேவை காதம்பரி அல்ல... பரமேஷ்வர்..."

"இந்தா இரண்டு லட்சம்..."

"மகாலட்சுமி மாதிரி ஒரு மனைவி இருக்கும்போது உங்களுக்கு எதற்கு சார் இன்னொரு பெண்ணிடம் சபலம்?"

"ஏய்! என் மனைவி மகாலட்சுமியா முற்றின பூசணிக்காயா என்று தீர்மானிக்க வேண்டியது நான்... நீ அது பற்றி கவலைப்பட வேண்டாம்... காஸெட்டைக் கொடு." பரமேஷ்வர் எழுந்தார்.

"முதலில் ஒரு ட்ரெய்லர் அனுப்பியிருந்தேனே, பார்த்துவிட்டு உங்கள் மனைவி என்ன சொன்னார்கள்?"

"என் மனைவி மட்டுமில்லை. இந்த உலகமே கேட்டாலும் அது என்னை வேண்டுமென்றே பிளாக் மெயில் செய்வதற்கான இன்றைய நவீன முறையில் எடுக்கப்பட்ட பொய்ப் படம் என்று என்னால் சொல்ல முடியும்! நிரூபிக்க முடியும்!"

"பொய்ப் படம் என்றா சொல்கிறீர்கள்?"

"நீ எடுத்தது உண்மையான சாட்சி. ஆனால் அதை பொய் என்று நிரூபிக்க என்னால் முடியும்" - பரமேஷ்வரின் குரலில் சற்று திமிர் சேர்ந்திருந்தது.

"பல பொய்களை அப்படித்தானே உண்மையாக்கினீர்கள்... உண்மைகளைப் பொய்யாக்கினீர்கள்."

"ஏய்! உன்னோடு அரட்டை அடிக்க நான் இங்கே வரவில்லை..."

"உங்கள் மகள் இந்த காஸெட்டைப் பார்த்தால் என்ன நினைப்பாள் பரமேஷ்வர்?"

"நீ என்ன சத்தியம் பண்ணினாலும் அவள் நம்ப மாட்டாள்... என் மீது அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை... அவளிடம் போய் நேரத்தை வீணடிக்காதே..."

"அவ்வளவு தூரம் நம்புகிற மகளுக்கு செய்த துரோகம் இல்லையா இது?"

"ஏய்! நான் வாக்குமூலம் கொடுக்க வரவில்லை... பணத்தைப் பிடி... காஸெட்டைக் கொடு... இன்னொரு தடவை என் வழியில் குறுக்கிட்டால் மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கி விடுவேன், ஜாக்கிரதை..."

"ரொம்பப் பழைய உவமானம் சார்" என்று சந்திரமோகன் சிரித்துக் கொண்டே காஸெட்டை அவரிடம் நீட்டினான். பணத்தைக் கட்டிலில் எறிந்துவிட்டு காஸெட்டுடன் பரமேஷ்வர் கதவை அடைத்தார். நின்றார். திரும்பினார்.

"நீ உன்னையறியாமல் நெருப்பைத் தொட்டு விட்டாய்... உன்னைப் பொசுக்காமல் அது விடாது..." என்று கதவை அறைந்து சாத்தி வெளியேறினார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ ஒன்பது ~

**க**ட்டுக்கள் அவிழ்க்கப்பட்டபோது, அபிதாவின் முகம் மிளகாய் போல் சிவந்து போயிருந்தது.

"ஸாரி" என்றான் சந்திரமோகன். அவள் வாயிலிருந்து துணியை எடுத்துக்கொண்டே, "உன் கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைத்ததா?"

அபிதா நாற்காலியிலிருந்து எழுந்தாள். கைகளை உதறிக் கொண்டாள். அவள் கண்களில் அவமானம் பாரமாய்த் தொங்கியது.

"என் அப்பா இவ்வளவு அசிங்கமானவரா?"

"நீ பார்த்தது உன் அப்பாவின் ஒரு பகுதிதான். இன்னும் பல அசிங்கமான பகுதிகள் இருக்கின்றன."

"நீ யார்? காதம்பரியின் ஆளா?"

"இல்லையில்லை. உன் அப்பாவிடம் நான் சொன்னது சத்தியமான வார்த்தைதான். காதம்பரிக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது..."

"பின்னே? யார் நீ?"

"என்னைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு உண்மையிலேயே ஆர்வம் இருந்தால் வா... சொல்கிறேன்... ஆனால் இங்கே வேண்டாம். உன் அப்பா அபாயமானவர். காஸெட் கைக்கு வந்தவுடன் தைரியம் வந்திருக்கும். போலீஸிற்குப் போயிருப்பார். எந்த நிமிஷமும் போலீஸ் இங்கே வரலாம். கஞ்சா வியாபாரம் செய்வதாகச் சொல்லி என்னைக் கைது பண்ணி இழுத்துப் போகலாம். முதலில் இந்த இடத்தை நான் காலி பண்ண வேண்டும். "

"போலீஸிற்கே என்னை அழைத்துப் போவதாய் உத்தேசம்?"

"இந்தப் பணத்திற்கு ஒரு வேலை இருக்கிறது. என்னுடன் வாயேன்..." என்றான், சந்திரமோகன், சற்றே இறைஞ்சும் குரலில்.

* * *

ஜிம்மில் தன் தொப்பையை சீர்படுத்துவதற்காக இயந்திரத்திடம் தன்னைக் கொடுத்திருந்தார் டி.எஸ்.பி. கஜேந்திரன்.

பரமேஷ்வரைப் பார்த்ததும் இயந்திரத்தை நிறுத்தினார். "என்ன பரமேஷ்... இந்தப் பக்கம்?" என்று புன்னகைத்தார். "நீதான் ட்ரிம்மாக பெண்களுக்கெல்லாம் கனவு நாயகனாக இருக்கிறாயே? உனக்கு எதற்கு ஜிம்?"

பரமேஷ்வர் முகம் சிரித்தார். "கண்பட்டுவிட்டது" என்றார். "என்னை ஒருத்தன் தொந்தரவு செய்கிறான்..."

"தி கிரேட் கிரிமினல் லாயரையா?" - டி.எஸ்.பி.யின் குரலில் ஆச்சரியம் இருந்தது. "பிளாக்மெயிலா?"

"ஆதாரம் வைத்திருந்தான்... வாங்கிவிட்டேன்... ஆனால் அவனை சும்மா விடக்கூடாது..." - பரமேஷ்வரின் குரல் ஆத்திரத்தில் நறநறத்தது.

"ஆளைச் சொல்லு"

"இடத்தைச் சொல்கிறேன். ஹோட்டல் கன்யா"

"இனிமேல் அவனால் உனக்கு தொந்தரவு இருக்காது" என்றார், டி.எஸ்.பி. கஜேந்திரன்.

* * *

அபிதா காரை நிதானமாக செலுத்தினாள். பின் இருக்கையில் வீற்றிருந்தான், சந்திரமோகன். "அந்த பச்சை கேட் அருகில் நிறுத்து" என்றான். கேட் அருகில் வண்டியை நிறுத்திவிட்டு அபிதா நிமிர்ந்து பார்த்தாள். அறிவிப்புப் பலகையில், "கஸ்தூரிபா முதியோர் இல்லம்" என்று எழுதியிருந்தது.

"இங்கே என்ன?" என்றாள் அபிதா, புரியாமல்.

"என்னோடு உள்ளே வா..." என்றான், சந்திரமோகன் காரிலிருந்து இறங்கிக் கொண்டே. நுழைந்தார்கள். வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு முதியோர்கள் பரவிக் கிடந்தார்கள்.

தடிமனான கண்ணாடி அணிந்தவர்கள், வளைந்த கைத்தடி கொண்டவர்கள், கண்களைச் சுருக்கிப் பார்ப்பவர்கள் என்று இருந்தவர்களெல்லாம் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தார்கள். சந்திரமோகன் அபிதாவைக் காரிடாரில் அழைத்துப் போனான். 'பொறுப்பாளர்' என்று பித்தளை போர்டு பதித்த அறைக் கதவைத் தட்டிவிட்டு நுழைந்தான்.

பொறுப்பாளர் உயரம் குறைந்தவராக இருந்தார். காந்தியின் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளவராக, கதரும் கதரும் அணிந்திருந்தார். எளிமையான தோற்றத்துடன், பெரிய பெரிய பற்களால் சிரித்தார்.

அபிதா இந்த மாதிரி இடங்களுக்கு இதற்கு முன் வந்திராததால் சற்று தயக்கத்துடன் நுழைந்தாள். தேய்ந்த மர நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தான் சந்திரமோகன்.

"அய்யா, இவர்கள் பெயர் அபிதா... பிரபலமான கிரிமினல் லாயர் பரமேஷ்வரின் ஒரே மகள். இவள் அப்பா இவளுக்காக பிறந்த நாள் பரிசாக இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்தார் - ஏதாவது நெக்லஸ் வாங்கிக் கொள் என்றார். ஆனால் அபிதாவிற்கு நகைகளில் ஆர்வம் இல்லை. அந்தப் பணத்தை ஆதரவற்றோர் இல்லத்திற்கு நன்கொடையாக கொடுக்கலாமே என்று ஆசைப்பட்டார்."

"எவ்வளவு நல்ல மனசும்மா உனக்கு!" என்றார் பொறுப்பாளர், சற்றை திகைத்து.

அபிதா நடப்பது எதுவும் புரியாமல் பார்த்தாள். பரமேஷ்வர் கொண்டுவந்து கொடுத்த இரண்டு லட்சத்தையும் எடுத்து மேஜை மீது வைத்தான் சந்திரமோகன். "இந்தப் பணத்தை நம் முதியோர் இல்லத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், அய்யா... ரசீதை அபிதா என்ற பெயருக்குக் கொடுத்து விடுங்கள்..."

"ரொம்ப நன்றிம்மா!" என்றார், பொறுப்பாளர் மலர்ந்த முகத்துடன். அபிதா மெதுவாகப் புன்னகைத்து வைத்தாள்.

நினைத்திருந்தால் சந்திரமோகனே அந்தப் பணத்தை தனக்கென எடுத்துக் கொண்டிருக்க முடியும். முதியோர் இல்லத்திற்குப் பணத்தை அப்படியே தூக்கிக் கொடுப்பது என்றால் எவ்வளவு பரந்த மனசு இருக்க வேண்டும்! அவனை அவள் பார்த்த பார்வையில் ஒரு சின்ன மாற்றம் வந்திருந்தது.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

ஹோட்டல் கன்யா. போலீஸ் இன்ஸ்பெக்டரின் முன்னிலையில் அந்த அறை திறக்கப்பட்டது. அறை காலியாக இருந்தது. "காலி பண்ணிக்கொண்டு போவதாகக் கூட அவன் சொல்லவில்லை இன்ஸ்பெக்டர்..." என்று கையைப் பிசைந்தார் ஹோட்டர் மானேஜர்.

ஒரு பெட்டியோ, ஒரு செட் உடையோ, பாத்ரூமில் பிளேடோ கூட இல்லையென்றால், அவன் மொத்தமாகக் காலி பண்ணிக் கொண்டு போய்விட்டான் என்றுதானே அர்த்தம்!

இன்ஸ்பெக்டர் அவனைப் பற்றிய அடையாளம் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்த்தார். அறையின் குறுக்கில் கட்டப்பட்ட கறுப்புத் திரையைப் பார்த்ததும் மானேஜர் ஆச்சரியமானார்.

"இது எங்களுடையது இல்லை" என்றார். "அவனே கொண்டு வந்திருக்கிறான்.. இந்தத் திரைக்கு என்ன அவசியம் வந்தது?" இன்ஸ்பெக்டர் இந்திய ராஜாவின் நெற்றி கேள்விகளால் சுருங்கியது.

அந்தத் துணியின் கீழ் விளிம்பருகே சதுரமாக ஒரு வெள்ளைப் பரப்பு தெரிந்தது. திரையை மேலே உயர்த்தி அதை ஆராய்ந்தார். அது ஒரு ஸ்டிக்கர். அந்த ஸ்டிக்கரில் - அந்த திரைத்துணியை விற்ற கடையின் பெயரும் விலைக்குறிப்பும் பதியப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டரின் முகத்தில் மெல்லிய சந்தோஷம் மலர்ந்தது.

# ~ பத்து ~

**எ**னக்கு சில விஷயங்கள் ஆச்சரியமாயிருக்கின்றன" என்றாள் அபிதா - காப்பியை உறிஞ்சிக்கொண்டே.

"என்ன?" சந்திரமோகன் அவளை நிமிர்ந்து பார்த்தான். "அப்பா என் வயசேயிருக்கும் ஒரு பெண்ணிடம் கேவலமாக நடந்து கொண்டது ஒரு அதிர்ச்சி. நீ கேசட்டை மட்டும் போட்டுக் காட்டியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன்... ஏதோ தகிடுதத்தம் பண்ணி என் அப்பாவைப் போல் படம் எடுத்து விட்டதாகத்தான் நினைத்திருப்பேன்... ஆனால் அவரே நேரில் வந்து பேசியதைப் பார்த்ததும் நான் மிக அதிர்ந்து விட்டேன்..."

"அது அதிர்ச்சி. ஆச்சரியம் என்ன?"

"காதம்பரியின் உதவி இல்லை என்று நீ சொன்னதை நம்பினால், அந்த வீடியோவை எடுக்க நீ நிறைய கஷ்டப்பட்டிருக்க வேண்டும்..."

"ஆமாம்... காதம்பரி வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து உள்ளே நுழைந்து... படுக்கையறையில் இருந்த ஒரே ஒரு பரண் அலமாரியில் தவழ்ந்தபடி உட்கார்ந்து ராத்திரி பூரா அவஸ்தைப்பட்டேன்."

"அவ்வளவு சிரமப்பட்டு எடுத்த வீடியோவிற்கு நீ பணம் கேட்பது நியாயமா இல்லையா என்பது ஒரு பக்கம். அப்படிக் கிடைத்த பணத்தில் ஒரு பைசா கூட உனக்காக வைத்துக் கொள்ளாமல் எதற்காக அந்த முதியோர் இல்லத்தில் கொடுத்துவிட்டாய்?" - அபிதா கேட்டதும், சந்திரமோகன் பார்வையை நகர்த்தினான். அவன் விழிகள் நனைந்திருந்தன.

"அந்த இல்லத்தில்தான் மூன்று வருடங்கள் நான் இல்லாதபோது என் அம்மாவைப் பார்த்துக்கொண்டார்கள்..." அவன் குரல் தழதழத்திருந்தது.

"நீ இல்லாத போது என்றால்? நீ போகும் இடத்திற்கு அம்மாவையும் அழைத்துக்கொண்டு போய் வைத்துக்கொண்டிருக்கலாமே!"

"நான் அமெரிக்காவிற்கோ, ஆப்பிரிக்காவிற்கோ போயிருந்தேன் என்று நினைத்து விட்டாயா? இதே ஊரில்தான் இருந்தேன். ஆனால் அம்மாவைப் பிரிந்து..."

"ஏன்?"

"நான் போயிருந்த இடம் சிறைச்சாலை... அங்கே என் அம்மாவை அழைத்துப் போய் வைத்துக் கொள்ள முடியவில்லை"

சிறைச்சாலை என்ற வார்த்தையை கேட்டதும், அபிதா நாற்காலியை அவசரமாக சற்று பின்னால் நகர்த்திக் கொண்டாள். ரெஸ்டாரெண்டில் சிலர் திரும்பிப் பார்த்தார்கள். சந்திரமோகன் விரக்தியானதொரு புன்னகையை அணிந்தான்.

"பயந்து விட்டாயா? நான் செய்த குற்றம் என்ன என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா?"

அபிதா தன் செயலுக்கு தானே வெட்கப்பட்டவளாக "ஸாரி" என்றாள். "சொல். உன்னைப் பற்றி சொல்..." என்று முகவாயில் கை பதித்து அவன் முகத்தையே பார்த்தாள்.

சந்திரமோகன் சொல்ல ஆரம்பித்தான்...

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பதினொன்று ~

**எ**ங்கள் குடும்பம் சின்னது. நான், என் அம்மா இரண்டே பேர்தான்.

அப்பா இல்லாத குறை தெரியாமல் அம்மாதான் வளர்த்தாள். சமையல் வேலை, துணி துவைக்கும் வேலை ஆஸ்பத்திரியில் ஆயா வேலை என்று என்னென்னவோ வேலைகள் எல்லாம் செய்து என்னை பள்ளிக்கு அனுப்பினாள். பள்ளிப் படிப்பு முடிந்ததும், தொழில் கல்வி. ஆர்வத்துடன் படித்தேன். இருபதாவது வயதில் வேலைக்குச் சேர்ந்தேன்.

மல்லையா லேத் ஒர்க்ஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? பிரபலமான தொழிற்சாலை. முதலாளி மல்லையா தங்கமானவர். ஆனால் அவருடைய பார்ட்னர் கிருஷ்ணதாஸ் என்பவர் கயவன்.

மல்லையா தன் பார்ட்னரை உயிருக்குயிரான நண்பராக நினைத்திருந்தார். அவரை நம்பி அத்தனை பொறுப்பையும் விட்டிருந்தார். வெளிநாட்டில் இருந்தார்.

கிருஷ்ணதாஸ் தொழிலாளர்களுக்கு முழு சம்பளம் கொடுக்க மாட்டார். ஆனால் கொடுத்த தொகையை விட கூடுதலான தொகைக்கு கையெழுத்து போடச் சொல்லி வற்புறுத்துவார். தொழிலாளர்கள் எல்லோருக்குமே அவர் மீது ஒரு வெறுப்பு இருந்தது. யூனியன் தலைவரை எப்படியோ காசு கொடுத்து வாங்கிவிட்டார் கிருஷ்ணதாஸ். அதனால் தொழிலாளர்களால் எந்த எதிர்ப்பும் காட்ட முடியாத ஒரு நிலை.

மூன்று நான்கு வருடங்களுக்கு மேலாக இந்த அவல நிலை நீடித்திருந்தது தெரியாமல் நான் போய் புதிதாக வேலைக்குச் சேர்ந்தேன். வேலையில் சேர்ந்து குறைந்தபட்சம் ஆறு மாதமாவது ஆனால்தான் யூனியனில் உறுப்பினராகலாம் என்று ஒரு விதிமுறை இருந்தது.

வேலை கிடைத்ததில் எனக்கு பெருமகிழ்ச்சி. என் அம்மாவை வேலைக்குப் போக வேண்டாம் என்று தடுத்து விட்டேன். எனக்கு வேலை கிடைப்பதற்காகக் காத்திருந்தது போல் அம்மாவுக்கும் உடல்நிலை தளர்ந்துவிட்டது. ஆஸ்துமா கொடுமை, மூச்சுத்திணறல்.

அம்மாவை உட்கார வைத்து கவனித்துக்கொள்ளும் பொறுப்பு கிடைத்த சந்தோஷத்தில் நான் இருந்தபோதுதான் அந்த அசம்பாவிதம் நடந்தது.

தொழிற்சாலையில் ரங்கசாமி என்று ஒரு மூத்த தொழிலாளி வேலை செய்யும்போது இயந்திரத்தில் அவர் கை மாட்டிக் கொண்டது. கை அப்படியே வெட்டப்பட்டு ரத்தம் கொட்டியது.

மருத்துவமனைக்கு எடுத்துப் போய்க் கூட அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இறந்துவிட்டார். அவருக்கு மனைவியும், நான்கு குழந்தைகளும், வயதான அப்பா அம்மாவுமாக மிகப் பெரிய குடும்பம்.

கம்பெனி ரூல் பிரகாரம் அவருடைய மூத்த மகனுக்கு வேலை தர வேண்டும். தவிர அவர் மனைவிக்கு நஷ்ட ஈடாக ஐந்து லட்சம் ரூபாய் தர வேண்டும். இதையெல்லாம் சொல்லி, முதலில் ரசீதில் கையெழுத்துப் போட வேண்டும் என்று ஏமாற்றி ரங்கசாமியின் மனைவியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டுவிட்டார் கிருஷ்ணதாஸ். மகனுக்கு வேலை தந்தார்களே தவிர, பணத்தைத் தரவேயில்லை.

கேட்டபோது கொடுத்தாயிற்று, ரசீதில் கையெழுத்து இருக்கிறது என்று அந்த அப்பாவி விதவையை ஏமாற்றினார்கள்.

தொழிலாளர்கள் கொதித்தார்கள். இதைப் பொறுக்கக் கூடாது என்று முடிவு செய்தார்கள்... யூனியன் தலைவர் வழக்கம்போல் முதலாளி பக்கம் பேசியதும், நேரடியாக மல்லையாவிற்கு தங்கள் மனக்குமுறல்களை கடிதமாக எழுதினார்கள்.

மல்லையா நேரடியாக விசாரணைக்கு வர சம்மதித்தார். ரங்கசாமியின் மனைவியிடம் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதற்கு ரசீதில் குறைந்தபட்சம் இரண்டு சக தொழிலாளர்களாவது சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டும் என்பது ரூல். ஒரு கையெழுத்து யூனியன் தலைவர் போட்டுவிட்டான். இரண்டாவது கையெழுத்தைப் போலியாகப் போட்டால் தொழிலாளர்கள் காட்டிக் கொடுத்துவிடுவார்கள் என்ற நிலைமை.

கிருஷ்ணதாஸ் என்னைக் கூப்பிட்டார். "நீ சங்கத்தில் உறுப்பினன் இல்லை. அதனால் மற்ற தொழிலாளர்களின் தீர்மானம் உன்னைக் கட்டுப்படுத்தாது. இரண்டாவது சாட்சிக் கையெழுத்தை நீ போடு" என்றார்.

இந்த சந்திப்பு அவர் பர்ஸனல் அறையில் நடந்தது. ரங்கசாமியின் உடல் மீது அவர் மனைவி விழுந்து கதறி அழுத காட்சி என் கண்களுக்குள்ளேயே நின்றிருந்தது. ரங்கசாமிக்குத் துரோகம் செய்ய எனக்கு சம்மதம் இல்லை.

"மாட்டேன்" என்றேன். கிருஷ்ணதாஸ் ஐம்பதாயிரம் ரூபாயை எடுத்துப் போட்டார்.

"பொறுக்கிக் கொள். கையெழுத்துப்போடு" என்றார்.

"எத்தனை லட்சம் கொடுத்தாலும் ஒரு ஏழைத் தொழிலாளிக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன்" என்று வேசமாக சொல்லிவிட்டு வெளியே வந்தேன். யார் மீதோ முட்டிக் கொண்டேன்.

நிமிர்ந்தால் - மல்லையா! அதற்கு முன் புகைப்படங்களில் மட்டுமே நான் பார்த்திருந்த முதலாளி. அவர் கால்களில் விழுந்தேன். நடந்ததையெல்லாம் சொன்னேன். மல்லையா வேறு எதையும் பொறுத்துக் கொண்டிருப்பார். நெருங்கிய நண்பனே துரோகம் செய்வது அவருக்குத் தாங்கவில்லை.

என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அந்த அறைக்குள் போனார். மல்லையாவைப் பார்த்ததும் கிருஷ்ணதாஸ் மிரண்டு போனார். ரசீதில் என்னைப் போலவே சாட்சி கையெழுத்தைப் போலியாகப் போட முயற்சி செய்துகொண்டிருந்தவர் கையும் களவுமாகப் பிடிபட்டதும் திணறிப் போனார். இருவர் குரலும் உயர, மல்லையாவிற்கும் அவருக்கும் சண்டை ஆரம்பித்தது. நான் செய்வதறியாது நின்றேன்.

"இத்தனை நாள் நான் தப்பு பண்ணிவிட்டேன். உன் மேல் இருந்த நம்பிக்கையில், உன்னைப் பற்றி எந்த புகார் வந்தாலும் அதை நான் சும்மா விடப்போவதில்லை. போலீஸை மட்டுமல்ல, பத்திரிகையாளர்களையெல்லாம் கூப்பிட்டு உன்னைப் பற்றி சொல்லப் போகிறேன்... இனிமேல் எந்த ஜன்மத்திற்கும் நீ பிஸினஸில் இறங்க முடியாதபடி பண்ணப்போகிறேன்" என்று மல்லையா கத்தினார்.

"சந்திரமோகன், அந்த பத்திரிகையாளர் கூட்டத்திற்கு நீயும் வா... கிருஷ்ணதாஸ் உன்னிடம் பேரம் பேசியதை உன் வாயாலேயே அங்கே சொல்..." என்றார்.

"சரி முதலாளி" என்றேன்.

கிருஷ்ணதாஸின் முகம் வெளுத்துவிட்டது. மல்லையாவுடன் நான் வெளியேற இருந்த நேரம், "ஏய் நில்லு!" என்று கிருஷ்ணதாஸின் குரல் குரைத்தது.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

நின்றோம். திரும்பினோம். அதிர்ந்தோம். கிருஷ்ணதாஸின் கையில் நீளமான பிச்சுவா கத்தி. "பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு நீ என் எதிர்காலத்தையே வீணாக்குவதை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேனா?" என்று கிருஷ்ணதாஸ் உறுமினார். கண்களில் வெறுப்பும், பயமும் தெரிந்தன.

நிலைமையை உணர்ந்த நான் உஷாராகும் முன், கிருஷ்ணதாஸ் வேசத்துடன் கத்தியை மல்லையாவின் நெஞ்சில் பாய்ச்சிவிட்டான்.

அந்த நிமிடத்தில் என் நெஞ்சில் மோதிய உணர்ச்சிகளை என்னால் விவரிக்கவே முடியாது. அச்சம். கோபம். ஆத்திரம். பயம். வேசம்... இத்தனையும் செய்துவிட்டு இந்த கிருஷ்ணதாஸ் தப்பிப்பதா என்ற வேசம்தான் என்னை செலுத்தியது.

மல்லையாவைத் தாங்கிப் பிடித்தேன். அவர் விழிகள் விறைத்தன. "அ...அ...அவனை விடாதே!" என்று சொல்லிவிட்டு அவர் கீழே சரிந்தார். அவர் நெஞ்சிலிருந்த கத்தியை வெடுக்கென்று உருவினேன். கிருஷ்ணதாஸைக் குத்திக் கிழித்துவிடும் வேசத்துடன் அவன் மீது பாய்ந்தேன்.

கிருஷ்ணதாஸ் வெகு சுலபமாக என்னைத் தவிர்த்தார். ஒரே தாவலில் கதவைத் திறந்து வெளியே பாய்ந்தான். உடனே கதவைத் தாளிட்டான். பெரும் கூச்சலிட்டான். ஜன்னலை மோதி மோதி ஆவேசமாய்க் கத்தினேன்.

யார் யாரோ ஓடினார்கள். அரைமணி நேரம் கழித்து கதவு திறக்கப்பட்டபோது - போலீஸ் என்னை மடக்கிப் பிடித்து என் கையில் விலங்கிட்டது. வழக்கு முற்றிலுமாக திசை திரும்பி நின்றது.
ரங்கசாமியின் மனைவியிடம் கொடுக்கச் சொல்லி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தை நான் கபளீகரம் பண்ணினேனாம். தட்டிக் கேட்க வந்த முதலாளியோடு கிருஷ்ணதாஸைக் கொலை செய்ய முயன்றேனாம். வேண்டாம் வேண்டாம் என்று மன்றாடிக் கொண்டு குறுக்கில் வந்த மல்லையாவின் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சி விட்டேனாம். அந்த அறையில் நடந்தது எங்கள் மூன்று பேருக்கு மட்டும்தான் தெரியும். ஆனாலும் எனக்கு சாதகமாகப் பேச சில தொழிலாளர்கள் முன் வந்தார்கள். ஆனால் யாருடைய பேச்சும் எடுபடவில்லை.

சண்டை நடந்தபோது கூடவே இருந்து என்னை சமாதானப்படுத்த முயற்சி செய்ததாக புதிதாக மூன்று சாட்சிகள் தோன்றினார்கள். மல்லையாவின் நெஞ்சில் நான்தான் கத்தியை பாய்ச்சினேன் என்பதை 'நேரில்' பார்த்தவர்களாக அந்த மூன்று சாட்சிகளும் நின்றார்கள். 'நான்தான் கொலைகாரன்' என்று ஆணித்தரமாக அந்த மூன்று பேரும் அடம் பிடித்தார்கள். என் அம்மா நெஞ்சில் அடித்துக் கொண்டாள். அழுதாள். புலம்பினாள். தன் மகன் அப்படியெல்லாம் செய்யத் தெரியாதவன் என்று கருணை கேட்டுக் கதறினாள்.

உண்மை எதுவும் எடுபடவில்லை. காரணம் என்ன தெரியுமா? கிருஷ்ணதாஸிற்காக வழக்கை அபாரமாக நடத்திய தி கிரேட் கிரிமினல் அட்வகேட் பரமேஷ்வர்! அவருடைய அற்புதமான வாதத் திறமையால் அவர் உண்மைகளைப் பொய்யாக்கினார். பொய்களை உண்மையாக்கினார். விளைவு?

கொலை முயற்சி என்று என்மீது குற்றம் சுமத்தப்பட்டது. திட்டமிட்டு செய்யாத கொலை என்பதாலும், மல்லையா தானாகக் குறுக்கில் வந்து கத்தியை நெஞ்சில் வாங்கிக் கொண்டார் என்பதாலும் தூக்கு தண்டனை தரப்படவில்லை.

தொழிலாளர்கள் நிலைமை மோசம். நான் புதியவன். எனக்காக எவ்வளவு நாள் போராட்டம் நடத்தி வயிற்றைக் காயப் போட முடியும்? நான் சிறைக்குப் போக வேண்டியது முடிவானதும் அம்மா விழுந்தவள்தான். எழுந்திருக்கவே இல்லை. கஸ்தூரிபா முதியோர் இல்லத்தில் இருக்கும் அந்த அய்யாதான் பொறுப்பெடுத்து பார்த்துக்கொண்டார். மூன்று

வருடங்கள் அங்கே இருந்தாள் அம்மா. அப்புறம், உடல்நிலை ரொம்ப மோசமாகி, ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனளிக்காமல் செத்தே போனாள்.

பரோலில் என்னை வெளியே விட்டார்கள். அம்மாவின் இறுதிக் காரியங்களை முடித்துவிட்டு மறுபடி சிறைக்குத் திரும்பினேன். தலைவர்களுடைய பிறந்தநாள்கள், எனது நன்னடத்தை என்று என்னென்னவோ காரணங்களுக்காக என் தண்டனைக் காலம் ஏழு வருடத்திலிருந்து குறைந்து நான் விடுதலை செய்யப்பட்டு விட்டேன்.

எனக்கு இருந்த ஒரே உறவு என் அம்மா... அவள் இனி இல்லை. திடீரென்று என் வாழ்க்கை இருட்டடிக்கப்பட்டுவிட்டது. சூன்யமயமாக்கப்பட்டுவிட்டது. மல்லையா கடைசி மூச்சைப் பிரியும்போது சொன்னதுதான் எனக்கு மறுபடி ஞாபகம் வருகிறது... கிருஷ்ணதாஸைக் காட்டி 'அவனை சும்மா விடாதே!' என்றார்.

கிருஷ்ணதாஸ் அன்றைக்கு இருந்ததைவிட இன்றைக்கு இன்னும் செல்வாக்குள்ளவர். வசதியானவர். இன்னும் பல பிஸினஸ்கள் பெருகிவிட்டன. வெளிநாடு போய்வந்த மகனும் பிஸினஸில் இறங்கப் போகிறார். கிருஷ்ணதாஸைப் போலத்தான் பரமேஷ்வரும். அவருடைய சொத்தும் வளர்ந்துவிட்டது.

ஆனால் பரமேஷ்வரின் பலவீனம் மோசமானது. மகாலட்சுமி போல் ஒரு மனைவி இருக்கும்போதே, இளம்பெண்களை பணத்தால் வாங்குகிறார் என்பது எனக்குத் தெரிந்தது... அப்புறம்தான்...

* * *

சந்திரமோகன் நிறுத்தினான். அவன் கண்களில் ஈரம்.

அபிதா கை நீட்டி அவன் கையைப் பற்றி அழுத்திக் கொடுத்தாள்.

"உன்னை இந்த நிலமைக்குக் கொண்டு வந்தவர்களை சும்மா விடக்கூடாது... ஆனால் என் அப்பாவை என்ன செய்யப்போகிறாய்?" - இந்தக் கேள்வியைக் கேட்கும்போது மட்டும் குரலில் மெல்லிய அச்சம் வந்தது.

"அவரை நான் தாக்கப் போவதில்லை" என்விரல் நுனி கூட அவர் மீது படப்போவதில்லை... ஆனால் பழி வாங்கப் போகிறேன்..."

"எப்படி?"

"பொறுத்திருந்து வேடிக்கை பாரேன்..." என்றான் சந்திரமோகன்.

"சந்தர்..." அபிதா அவன் பெயரை சுருக்கிக் கூப்பிட்டதும் அவன் முகத்தில் சிறு ஆச்சரியம் வந்தது.

"என் அப்பா உயிருக்கு ஆபத்து இல்லை என்று நீ உத்திரவாதம் தந்தால் உனக்கு நானும் ஒத்துழைப்பு தரத் தயார்" என்றாள் அபிதா.

சந்திரமோகன் அவளை நன்றியோடு பார்த்தான். "அவர் உயிருக்கு என்னால் எந்த ஆபத்தும் வராது... செத்துப் போன என் அம்மா மேல் சத்தியம்... நீ ஒத்துழைப்பு தருவதாயிருந்தால் என் வேலை ரொம்ப சுலபமாகிவிடும்."

"நான் என்ன செய்யவேண்டும், சந்தர்?"

அபிதா ஆர்வத்துடன் கேட்டாள். சந்திரமோகன் நிதானமாக தன் திட்டத்தை விவரித்தான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பனிரெண்டு ~

**போ**லீஸ் ஜீப்பைப் பார்த்ததும் அந்த துணிக் கடையில் இருந்தவர்கள் சற்றே விறைத்தார்கள்.

இன்ஸ்பெக்டர் இந்தியராஜா அந்த கறுப்புத் திரை துணியைக் கவுன்டரில் போட்டார். விசாரித்தார்.

"இந்தத் துணியை நாங்கள்தான் சார் நான்கு நாட்களுக்கு முன் விற்பனை செய்தோம்..."

"யாருக்கு?"

பில் புத்தகத்தில் பிரட்டிப் பார்த்து, "பெயர் இல்லை, இன்ஸ்பெக்டர்... ஆனால் வந்தவன் தாடி, மீசை வைத்திருந்தான்" என்றார்கள்.

"எதிர்க்கடையிலிருந்து அவன் ஒரு போன் செய்தானே" என்று இன்னொரு சிப்பந்தி நினைவூட்டினார்.

எதிர்க்கடையில் பழைய பில்களிலிருந்து அந்தத் தேதியில் அந்த நேரத்தில் செய்யப்பட்ட போன் நம்பரைக் குறித்துக் கொண்டபோது, இன்ஸ்பெக்டர் இந்தியராஜாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

* * *

"பரமேஷ்" - டி.எஸ்.பி. கஜேந்திரனின் போனில் பேசினார். "அந்த ஆள் இன்னும் மாட்டவில்லை... ஆனால், தேடிக் கொண்டிருக்கிறோம்..."

பரமேஷ்வரின் முகத்தில் சலிப்பு வந்தது, "எந்த விவரமுமா கிடைக்கவில்லை?"

"கிடைத்தது... ஆனால் அது ஒரு வட்டமாக முடிந்துவிட்டது... அவன் ஹோட்டல் ரூமில் மாட்டியிருந்த கறுப்புத் திரையை வாங்கிய இடத்திலிருந்து ஒரு போன் பண்ணியிருக்கிறான்... எந்த நம்பருக்குத் தெரியுமா?" - டி.எஸ்.பி. தொலைபேசி எண்ணை சொன்னார்.

"அது என்னுடைய போன் நம்பர் அல்லவா?" என்றார் பரமேஷ்வர்.

"ஆமாம்... திரையை வாங்கிவிட்டு உன்னுடன் பேசியிருக்கிறான்... அங்கே வட்டம் முடிந்துவிடுகிறது. மேற்கொண்டு வேறு விவரம் கிடைத்தால் நீயும் சொல்லு. நாங்களும் வேட்டையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்..."

பரமேஷ்வர் ஏமாற்றத்துடன் போன் தொடர்பைத் துண்டித்தார்.

# ~ பதிமூன்று ~

**ப**ரமேஷ்வர் தூக்கம் இல்லாமல் ஸிட் அவுட்டில் அமர்ந்திருந்தார். வானில் நட்சத்திரங்கள் இறைந்து கிடந்தன. நசுங்கிய வெள்ளித்தட்டு போல நிலா.

சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார். போலீஸ் எல்லா விதத்திலும் கை விரித்துவிட்டது. அவருடைய செல் போனிற்கு வந்த போன்களை கவனித்து 'அவனிடமிருந்து' வந்த போன்களின் எண்களைக் கூட போலீஸில் சொன்னார். எல்லாமே பப்ளிக் பூத்களிலிருந்து செய்யப்பட்ட போன்கள்.

அவனுடன் நடந்த உரையாடல்களையெல்லாம் நினைவுபடுத்திப் பார்த்தார். காதம்பரி காசுக்கு ஆசைப்பட்டு பிளாக்மெயில் செய்ய உதவியாக இருப்பாளா என்றால் அதுவும் சரியாகப் பொருந்தவில்லை. வேறென்ன சொன்னான்?

சடாரென்று நினைவுக்கு வந்தது. வீடியோவில் இருப்பது பொய்ப் படம் என்று தன்னால் சாதிக்க முடியும் என்று அவர் சொன்னபோது அவன் என்ன சொன்னான்?

'பல பொய்களை அப்படித்தானே உண்மையாக்கினீர்கள்? உண்மைகளைப் பொய்யாக்கினீர்கள்?' நிமிர்ந்து உட்கார்ந்தார்.

பொய்களை உண்மையாக்குவதும், உண்மைகளைப் பொய்யாக்குவதும் அவருடைய வக்கீல் தொழில் தொடர்பான விஷயமல்லவா? அப்படியானால்... அவருடைய தொழிலால் பாதிக்கப்பட்டு தண்டனை பெற்றவனாக இருக்கலாமோ? அவர் ஆஜரான வழக்குகளால் தண்டனை பெற்று அண்மையில் சிறையிலிருந்து விடுதலையானவர்கள் யார் யார் என்று விசாரித்தால்? உடனடியாக டி.எஸ்.பி. கஜேந்திரனுக்கு போன் செய்தார்.

எதிர்முனை எடுக்கப்பட்டு அவர் "ஹலோ" என்று சொன்ன நேரம், பின்னாலிருந்து குரல் வந்தது. "அப்பா!"

அபிதா! பரமேஷ்வர் அவசரமாக போனை துண்டித்தார். அபிதாவின் முன்னிலையில் அவர் போலீஸிடம் பேச முடியாது.

"என்னப்பா இன்னுமா நீங்கள் தூங்கவில்லை?" அபிதா எதிரே வந்து நின்றதும் சிகரெட்டை அவசரமாக ஆஷ்ட்ரேயில் போட்டார்.

"இல்லைம்மா... யோசித்துக் கொண்டிருந்தேன்."

"யாரைப் பற்றிப்பா?"

"நாளைக்கு நான் ஆஜராக வேண்டிய கேஸைப் பற்றிம்மா. நீ ஏன் தூங்கவில்லை அபிதா?"

"இன்டர்நெட்டில் சாட் பண்ணிக் கொண்டிருந்தேன் டாடி... அப்புறம் ஈ-மெயிலை செக் பண்ணிக்கொண்டிருந்தபோது என் பெயருக்கு ஒரு விநோதமான மெயில் வந்திருக்கிறது, டாடி..."

"என்ன?" பரமேஷ்வர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"நாளை உன்னைக் கடத்தப் போகிறேன்... முடிந்தால் உன் அப்பாவைத் தடுக்கச் சொல்... - சி.எம்..."

பரமேஷ்வர் எதிரே அபிதா அமர்ந்தாள். "சி.எம். என்றால் யார் டாடி? முதலமைச்சரா?"

சி.எம்... சி.எம்... பரமேஷ்வருக்கும் புரியவில்லை. "தெரியவில்லையேம்மா... நீ ஒன்று செய்... நாளைக்கு வீட்டோடு இரு. எங்கேயும் வெளியே போக வேண்டாம்"

"என்ன டாடி நீங்கள்? ஈ-மெயிலுக்கெல்லாம் போய் பயப்படுகிறீர்கள்?" அபிதா சிரித்தாள். "உங்கள் காரில் ஸ்டிக்கர் ஒட்டியவன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?"

ஸ்டிக்கர் ஒட்டியது வரைதான் இவளுக்குத் தெரியும், வீடியோ காஸெட் பார்த்தது பற்றி மனைவி ஜானகி பெரிய மனது பண்ணி இவளுடன் பகிர்ந்து கொள்ளவில்லை என்பதே அவருக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

"போலீஸில் சொல்லியிருக்கிறேன், அபிதா. இப்போது உனக்கு ஈ-மெயில் வந்திருக்கிறது என்கிறாய்... இது பற்றியும் சொல்லி விடுகிறேன்... அவர்கள் கண்டுபிடிக்கட்டும்..."

"ஈ-மெயிலை ஏதாவது ஒரு பிரவுஸிங் செண்டரிலிருந்து யார் வேண்டுமானாலும் அனுப்பலாமே டாடி... எவனாவது விளையாட்டிற்கு அனுப்பியிருப்பான்... அதைப் பற்றி கவலைப்படாமல் தூங்குங்கள்..."

அபிதா பரமேஷ்வரின் முன்தலைமுடியை லேசாகக் கலைத்துவிட்டு எழுந்தாள்.

"அபிதா... நீ நாளைக்கு எங்கேவும் போக வேண்டாம்..."

"ஒரு கிரேட் கிரிமினல் அட்வகேட்டின் மகள் ஒரு அற்பமான ஈ-மெயிலுக்கு பயப்படலாமா? குட்நைட்" அவள் சட்டென்று போய்விட்டாள்.

பரமேஷ்வர் அடுத்த சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தார். சி.எம். என்றால் யார்? டி.எஸ்.பி.யிடம் பேசலாம் என்று செல்போனை எடுத்தபோது இன்கமிங் காலிற்கான வெளிச்சம் ஒளிர்ந்தது.

காதில் வைத்தார். "ஹாய் பரமேஷ்!" அவனேதான்!

"உன் மகளை இன்றைக்கே நன்றாகப் பார்த்துக் கொள்... நாளைக்கு அவள் என் வசம் இருப்பாள்..."

"ஏய் யார் நீ?"

"என் பெயர் ஏய் இல்லை... சி.எம்.!" போன் தொடர்பு அறுந்தது.

பரமேஷ்வர் தன் உள்ளங்கையெல்லாம் வியர்த்திருப்பதைப் பார்த்தார். ச்சே... ஏன் இப்படி பயப்படுகிறேன்? டி.எஸ்.பி. கஜேந்திரனை போனில் பிடித்தார்.

"சி.எம். என்றா சொன்னான்? நாளைக் காலை பத்து மணிக்கு உனக்கு விவரங்கள் தருகிறேன்..." என்றார் கஜேந்திரன்.

"கஜா... இன்னொரு விஷயம்.."

"என்ன?"

"என் மகளைக் கடத்தி விடுவேன் என்று ஈ-மெயில் அனுப்பியிருக்கிறான். அவள் தைரியசாலிதான். ஆனாலும்..."

"ஆனாலும் 'அப்பன் மனசு' பயப்படுகிறதாக்கும்!"

"ஆமாம் கஜா... அவளுக்குத் தெரியாமல் நாளைக்கு அவளுக்கு பாதுகாப்புத் தர வேண்டும்..."

"கவனித்துக் கொள்கிறேன்... எத்தனையோ வக்கீல்கள் தூக்கத்தைக் கெடுத்தவன் நீ... இப்போது நீயே தூக்கமில்லாமல் இருப்பது ஆச்சரியமாயிருக்கிறது..."

"கோர்ட்டில் எத்தனை எமன்களை வேண்டுமானாலும் சந்திப்பேன் கஜா. ஆனால் பெண்டாட்டிக்கு காஸெட் அனுப்பி மகளுக்கு ஈ-மெயில் அனுப்பி குடும்பத்திற்குள் நுழைந்துவிட்டால் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது..."

"நாங்கள் எல்லாம் இருக்கிறோம்... கவலைப்படாதே... தூங்கு..."

பரமேஷ்வர் போனை மெல்ல அணைத்தார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பதினான்கு ~

**கி**ருஷ்ணதாஸ் காரிலிருந்து இறங்கினார். சைகை செய்ததும், டிரைவர் காரை பார்க்கிங் பகுதிக்கு ஓட்டிப் போனான்.

கிருஷ்ணதாஸ் மணிக்கட்டு நேரத்தைப் பார்த்தார். விடிகாலை 5:45. கடற்கரை சாலையில் இந்த நேரத்திலேயே நிறைய வாகங்கள் வந்திருந்தன. காலையில் நடை பயில்பவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நடைபாதையில் பல்வேறு மனிதர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணதாஸ் அந்தக் கூட்டத்தோடு நடப்பதில்லை. கடற்கரை மணல்வெளியை ஒட்டி உட்புறம் இருந்த சாலையில் அவர் நடப்பது வழக்கம். அங்கே அவர் தோளோடு யார் தோளும் இடிக்காது. பரிச்சயமான முகங்கள் எதிர்ப்பட்டு தேவையற்ற பேச்சு கொடுக்காது.

காலை நேரத்து குளிர் இதமாயிருந்தது. தொடுவானத்தைக் கடல் நனைத்துக் கொண்டிருந்தது. ரஞ்சு சூரியன் மேக விளிம்புகளில் வர்ணம் பூசி எழும்பிக் கொண்டிருந்தது.

கிருஷ்ணதாஸ் நடப்பதற்கென்றே பிரத்யேகமாக தருவித்திருந்த பருத்தி உடை அணிந்திருந்தார். கடற்காற்று குளிராகவும், சூரிய ஒளி ஒத்தடம் கொடுப்பது போலவும் இருக்க கிருஷ்ணதாஸ் நடக்கத் துவங்கினார். அவரைப் போலவே உள்சாலையைத் தேர்ந்தெடுக்கும் வேறு சிலரும் அந்த சாலையில் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தனர்.

கிருஷ்ணதாஸ் இருநூறடி நடந்திருப்பார். கடற்கரை மணல்வெளியிலிருந்து ஏதோ நிழலாய்த் தாவி வருவது போல் தோன்ற அவர் அந்த திசையில் திரும்பினார். விர்ர்ர் என்று ஒரு மடக்கிய முஷ்டி பறந்து வந்தது. அவர் சுதாரிக்கும் முன் அது அவருடைய முகத்தில் மோதியது. கிருஷ்ணதாஸ் எந்த வயதிலும் அப்படி ஒரு மோதலை எதிர்கொண்டதே இல்லை. மூக்கு ஓட்டைகளில் ரத்தம் எட்டிப் பார்த்தது. தடுமாறி அந்த தார்ச் சாலையின் சொரசொரப்பில் அவர் மல்லாந்து விழுந்தார்.

அவர் முகத்தில் கையை வீசியவன் இப்போது அவர் அருகே ஒரு கோபுரம் போல் நின்றான். அவருடைய கோணத்திலிருந்து பார்த்தபோது அவனுடைய முக அமைப்பு புரியாமல், முகவாயின் கீழ்ப்பகுதிதான் தெரிந்தது. அந்தக் கோணத்தில் அவனுடைய கால் எழும்பியபோது கப்பலில் இயங்கும் கிரேன் எழும்பினாற் போலிருந்தது.

பாதுகாப்பு செயலாக அனிச்சையாக அவர் கை உயர்ந்து அவனது தாக்குதலைத் தவிர்க்கப் பார்க்க, அந்த பூட்ஸ் கால் ஓங்கியது. வேகமாக இறங்கியது. அவருடைய முழங்கையைத் தாக்கி நெஞ்சில் தொம்மென்று இறங்கியது.

கிருஷ்ணதாஸின் கண்முன் பூச்சிகள் பறந்தன. "ஹெல்ப்!" என்று கத்துவதற்கு அவர் வாய் திறந்தவுடன் பூட்ஸ்கால் அந்த வாயில் ஒரு முறை 'தப்' என்று முத்திரை குத்தியது. அவருடைய குரல் கேட்டு எங்கிருந்தோ யார் யாரோ ஓடிவர ஆரம்பிக்க, அவரைத் தாக்கியவன் சரேல் என்று திரும்பினான். அவரை விட்டுவிட்டு ஓடினான்.

* * *

தனியார் மருத்துவமனை.

கிருஷ்ணதாஸின் முகத்தை டாக்டர்கள் கையாண்டனர்.

மூக்கு எலும்பு விரிசல் விட்டிருந்தது. மேல் வரிசைப் பற்களில் முன்பற்கள் இரண்டும் உடைந்து உள்வாங்கி கன்னத்து தசையைக் கிழித்திருந்தன. வாய்க்குள் மணல்துகள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. கிருஷ்ணதாஸ் அரைகுறையான மயக்கத்தில் இருந்தார். அவருடைய செல்வந்த வாழ்க்கையில் இப்படியொரு மோசமான நிலைமையை சந்தித்ததே இல்லை.

போலீஸிலிருந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் கிருஷ்ணதாஸின் வார்த்தைகளுக்காக அவர் அருகிலேயே தவம் இருந்தார். தாக்கியவனை வேட்டையாடவும் போலீஸ் தயங்கவில்லை. அந்தத் தாக்குதலைப் பார்த்து ஓடிவந்து கிருஷ்ணதாஸை எழுப்பி அவருடைய காரில் திணித்து மருத்துவமனைக்கு அனுப்பியவர்களிடம் இன்ஸ்பெக்டர் விசாரித்துப் பார்த்துவிட்டார்.

அவன் முகத்தை யாரும் பார்க்கவில்லை. சரியான அடையாளம் சொல்ல யாருக்கும் முடியவில்லை. அவனுடைய தோற்றத்தை வைத்து அவன் இளைஞன் என்றார்கள். இருபத்தைந்து வயது இருக்கலாம் என்றார்கள். ஆறடிக்கு சற்றுக் குறைவான உயரம் என்றார்கள். ஒரு மோட்டார் சைக்கிளில் ஒடி ஏறித் தப்பிவிட்டான் என்றார்கள். மோட்டார் சைக்கிள் எண்ணை மட்டும் உத்தேசமாக யாரோ நினைவுபடுத்திச் சொன்னார்கள்.

கிருஷ்ணதாஸ் கண்களை உருட்டிப் பார்த்தார். அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த அவருடைய மகன் அஸ்வினை குனியச் சொன்னார்.

"பர...மேஷ்...வரைக்....கூப்பிடு..." என்றார். இதைச் சொல்வதற்குள் வலியில் அவர் முகம் கசந்து போனது.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பதினைந்து ~

**போ**ன் அலறிய அலறலில் பரமேஷ்வர் திடுக்கிட்டு விழித்தார். விழித்துக் கடிகாரத்தின் மீது பார்வை ஓடியது. மணி 7.00! இரவு வெகு நேரம் தூங்காமல் விழித்திருந்ததில் காலைத்தூக்கம் நீண்டு விட்டது. விழிப்பு தள்ளிப் போய்விட்டது.

போனை அள்ளி எடுத்தார். எதிர்முனையில் கிருஷ்ணதாஸின் மகன் அஸ்வினின் குரல் படபடவென்று பொறிந்தது. தூக்கம் முற்றிலும் விலகியவராக பரமேஷ்வர் கட்டிலில் எழுந்து அமர்ந்தார். அறை வாசலில் அவருடைய மனைவி ஜானகி நின்றிருந்தாள். ரிசீவரை வைத்ததும், பரமேஷ்வர் அவளிடம் எரிந்து விழுந்தார்.

"ஏன் என்னை இவ்வளவு நேரம் எழுப்பவில்லை?"

முன்பு எப்போதாக இருந்தாலும் அவர் மனைவி மிரண்டு உடனே மன்னிப்பு கேட்பாள். னால் இப்போது நிமிர்ந்து அவன் விழிகளை நேருக்கு நேர் சந்தித்தாள்.

"ராத்திரி எங்கேயெல்லாம் போனீர்களோ? என்ன களைப்போ? நான் எப்படி எழுப்புவேன்?"

அவள் குரலில் இருந்த கேலி அவருக்கு ஆத்திரமூட்டியது. ஆனால் அவளுடன் தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்க அவருக்கு நேரமில்லை. கிருஷ்ணதாஸ் இளங்காலையிலேயே தாக்கப்பட்டு முதலுதவிக்கென்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக அஸ்வின் சொன்னான். பத்து நிமிடத்திற்குள் அங்கே அவரை அவன் எதிர்பார்ப்பதாக சொன்னான்.

போர்வையை உதறிவிட்டு பரமேஷ்வர் பரபரப்பாக எழுந்தார். போன் மறுபடி ஒலித்தது. எடுத்தார்.

டி.எஸ்.பி. கஜேந்திரன்! "பரமேஷ்... நீ கேட்ட விவரம் கிடைத்துவிட்டது... சந்திரமோகன் என்பவன் சமீபத்தில் விடுதலையாகி இருக்கிறான்... சந்திரமோகனை ஞாபகம் இருக்கிறதா?"

சந்திரமோகன்! பரமேஷ்வரின் மூளை கம்ப்யூட்டர் வேகத்தில் நினைவுகளில் புரட்டியது.

"எஸ்... என்றார். "கிருஷ்ணதாஸின் கேஸ்... ஒரு வருஷ கடுங்காவல் இல்லை?"

"ஏழு வருஷம் நான்கு வருஷமாகக் குறைந்து அவன் வெளியே வந்துவிட்டான்..."

"தேங்க்யூ... கஜா..."

சந்திரமோகன்!

ஆங்கிலத்தில் எழுதினால் அதன் சுருக்கம் C.M.! சி.எம். என்றால் சந்திரமோகனாகத்தான் இருக்கவேண்டும்.

கிருஷ்ணதாஸைக் காலையில் தாக்கியவனும் அவனாகத்தான் இருக்க வேண்டும்.

பரமேஷ்வர் சுறுசுறுப்பானார்.

# ~ பதினாறு ~

**ச**ந்திரமோகன் காப்பி குடித்துவிட்டு அந்த ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டபோது, அவன் மோட்டார் கைக்கிளைத் தொட்டுக் கொண்டு இரண்டு கான்ஸடபிள்கள் நின்றிருந்தனர்.

சந்திரமோகன் பதறவில்லை. அவர்களை நெருங்கினான். "கொஞ்சம் நகர்கிறீர்களா? வண்டியை எடுக்க வேண்டும்..."

"இந்த வண்டி உன்னுடையதா?"

" ஆமாம்."

உடனே கான்ஸ்டபிள் அவன் பின்கழுத்தில் கை வைத்து சட்டைக் காலரைப் பற்றினார். "உன்னைத் தாண்டா தேடிக் கொண்டு வந்தோம்"

* * *

கிருஷ்ணதாஸ் இமைகளைத் திறந்தார். அவருக்கு நெருக்கத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட அவனைப் பார்த்தார். சந்திரமோகன்!

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு முன் அவரால் சிறைக்கு அனுப்பப்பட்ட சந்திரமோகன்!

"சார், காலையில் பீச்சில் உங்களைத் தாக்கியது இவனா - பார்த்துச் சொல்லுங்கள்"

கிருஷ்ணதாஸ் படுத்திருந்த கோணத்திலிருந்து பார்த்ததும் பளிச்சென்று அ டையாளம் புரிந்தது. இவன்தான்! இவனேதான்.

"இவன்தான்!" என்றார், வலியினூடே. சந்திரமோகனின் பின்தலையில் சொட்டேர் என்று போலீஸின் அடி விழுந்தது.

"இங்கே அடிக்காதீர்கள்" என்று குரல் வந்தது. திரும்பினால் டி.எஸ்.பி. கஜேந்திரன்.

"அவனை தனி ரூமிற்கு இழுத்து வாருங்கள்..."

"வெயிட்!" என்றான் சந்திரமோகன். என்னை எதற்காக அடிக்கிறீர்கள்?"

"தனியே சொல்கிறேன், பிரதர்..." என்று கர்ஜித்தார், கஜேந்திரன்.

* * *

காவல் நிலையம். விசாரணைக்கென்று ஒதுக்கப்பட்ட பல நாள் பயன்படுத்தப்படாத தனி அறை. பழைய காற்றின் வாசம் நிறைந்திருந்தது. சந்திரமோகன் தரையில் எறியப்பட்டான். போலீஸின் பூட்ஸ் கால் அவனை விலாவில் உதைத்தது. அடுத்த உதையிலிருந்து தப்பித்து சந்திரமோகன் வேகமாக எழுந்தான்.

"என்னை காரணமில்லாமல் தாக்க முடியாது... அப்புறம் என் வக்கீலுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும்."

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"இதைப் பாருடா..." என்றார் கஜேந்திரன், நக்கலாக. நெருங்கி அவன் கன்னத்தில் பொறி பறக்க இன்னொரு அடி அடித்தார்.

"காலையில் கடற்கரையில் கிருஷ்ணதாஸ் வாக்கிங் போகும்போது அவர் மீது தாக்குதல் நடத்தினாயே... அந்தக் காரணம் போதுமா?"

"இன்று காலையிலா?" . சந்திரமோகன் தன் உதட்டோரத்து ரத்தத் துளியைத் துடைத்துக் கொண்டான். "இன்று காலையில் நான் கடற்கரை பக்கமே போகவில்லையே... என் வக்கீல் வீட்டில் அல்லவா இருந்தேன்?"

"என்னடா வக்கீல் வக்கீல் என்று பூச்சி காட்டுகிறாய்? உனக்கு எவன்டா வக்கீல்?"

"மிஸ்டர் பரமேஷ்வர்... பிரபல கிரிமினல் அட்வகேட்!"

"என்னது! பரமேஷ்வரா? அவரும் சேர்ந்துதான் உன்னை தள்ளப் போகிறார்... பரமேஷ்வர் இவனுடைய வக்கீலாம்! அவருடைய ஃபீஸ் எவ்வளவு தெரியுமா உனக்கு?"

"தெரியும்!"

"அவருக்கு ஒரு சிகரெட் வாங்கித் தரக்கூட உனக்கு அருகதை இல்லை..."

"நீங்கள் பரமேஷ்வரைக் கூப்பிடுங்கள்... அவர் எனக்காக ஆஜராவாரா மாட்டாரா என்று நானே கேட்கிறேன்..." சந்திரமோகன் நிதானமான குரலில் சொன்னான்.

டி.எஸ்.பி. கஜேந்திரன் ஏளனமான புன்னகையுடன் அங்கிருந்த தொலைபேசியைப் பயன்படுத்தினார்.

"பரமேஷ்... எங்கேயிருக்கிறாய்?"

"காரில்" என்றார், பரமேஷ்வர். " ஆஸ்பத்திரிக்குதான் வந்து கொண்டிருக்கிறேன்..."

"சி.எம். என்கிற சந்திரமோகன் என்கிற அயோக்கியனை நாங்கள் பிடித்திருக்கிறோம் பரமேஷ்... அவனுக்கு உன்னோடு பேச வேண்டுமாம்..."

"கொடு... கஜா..."

"ஏய், இங்கே வா... பேசு" - டி.எஸ்.பி. ரிசீவரை நீட்ட, அதை நோக்கி சந்திரமோகன் உந்தித் தள்ளப்பட்டான்.

சந்திரமோகன் ரிசீவரை வாங்கினான்.

"வணக்கம்" என்றான், கனத்த குரலில்.

"என்ன பிரதர், சௌக்கியமா? நெருப்போடு விளையாடி விட்டாய் என்றேனே, இப்போது அர்த்தம் புரிகிறதா? கிருஷ்ணதாஸை அடித்திருக்கிறாய்... கஞ்சா கடத்தியிருக்கிறாய்... இன்னும் என்னென்ன குற்றங்கள் உன் மீது சுமத்தப்படப் போகின்றன தெரியுமா?"

"என்னைப் பிடிக்காதவர்கள் யாராவது என் மீது இப்படிக் குற்றம் சுமத்தலாம். ஆனால் நான் ஏன் பயப்படவேண்டும்? எப்படிப்பட்ட குற்றச்சாட்டிலிருந்தும் என்னை வெளியே கொண்டு வர உங்களைப் போல் ஒரு அபாரமான அட்வகேட் இருக்கும்போது எனக்கு என்ன கவலை?"

"நானா? உனக்காக நான் வாதிடுவேன் என்று உனக்கு யார் சொன்னது?"

"நீங்கள்தான்! இன்று காலை உங்கள் வீட்டிற்கு நான் வந்திருந்தபோது சொன்னீர்களே!"

"என் வீட்டிற்கா? என்ன பேத்துகிறாய்?"

"அதற்குள் மறந்து விட்டீர்களா? நான், நீங்கள் அபிதா மூன்று பேரும் ஒன்றாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோமே! அபிதாவை வேண்டுமானாலும் கேளுங்கள்!"

"அபிதா! அவள் பெயரை ஏன் இழுக்கிறாய்?"

"அபிதாவோடு பேசிவிட்டு என்னுடன் பேசுங்கள்" என்று ரிசீவரை வைத்தான், சந்திரமோகன்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பதினேழு ~

**ப**ரமேஷ்வரின் உடல் படபடவென்று நடுங்கியது.

அபிதா!

அபிதாவை கடத்துவதாக முந்தின இரவு வந்த தொலைபேசி மிரட்டலை மறந்துவிட்டாரே. பரபரப்பாகக் கிளம்பும் அவசரத்தில், அபிதாவைக் கூப்பிட்டு மறுபடி எச்சரிக்கக் கூட மறந்து விட்டாரே.

பரமேஷ்வர் காரை ஓரமாக நிறுத்தச் சொன்னார். செல்போனில் மனைவியைக் கூப்பிட்டார். "அபிதாவைக் கூப்பிடு..." என்றார்.

"அபிதாதான் விடிகாலையிலேயே டென்னிஸிற்குக் கிளம்பி விட்டாளே!"

"என்னது? டென்னிஸ் போயிருக்கிறாளா?" பரமேஷ்வரின் குரல் கோபத்தில் குரைத்தது. "என்னிடம் ஏன் சொல்லவில்லை? எங்கேயும் போக வேண்டாம் என்றேனே?"

"நீங்கள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்!"

"தூங்கத்தானே தூங்கினேன்? செத்தா போய்விட்டேன்?" தொடர்பைத் துண்டித்தார்.

டிரைவரின் முதுகு விறைப்பதை கவனித்தார். அவமானமாய் உணர்ந்தார். ஏன் இப்படி அவசரப்பட்டு என் பொறுமையை விட்டு விட்டேன்?

அபிதாவிற்கு ஒரு செல் போன் இருக்கிறதே... கூப்பிட்டு டென்னிஸ் கோர்ட்டில் இருப்பவளோடு பேசி விட்டால் போயிற்று!

அபிதாவின் எண்ணை டயல் செய்தார். எதிர்முனையில் போன் ஒலித்தது... தொடர்ந்து ஒலித்தது - எடு, அபிதா. சீக்கிரம் எடேன்! துண்டித்துவிட்டு மறுபடி டயல் செய்தார். இந்த முறை மூன்று முறை அடித்ததும் தொடர்பு உயிர்பெற்றது.

"அபிதா!" என்றார், பரபரப்பாக.

"அப்பா... அப்பா..." அவள் குரல் வெகு தூரத்திலிருந்து ஒலிப்பதுபோல் இருந்தது. நடுக்கத்துடன் வந்தது.

"அபிதா, டென்னிஸ் கோர்ட்டில்தானே இருக்கிறாய்?"

"இல்லை, டாடி.... டென்னிஸ் கோர்ட் போகும் வழியில் எவனோ என்னைக் கடத்தி விட்டான்......"

"அபிதா!"

"ஐயோ... அடிக்காதே..." அபிதாவின் குரல் மறுமுனையில் அலறியதும் பரமேஷ்வரின் இதயம் தடதடத்தது.

"அபிதா... அபிதா... எங்கேம்மா இருக்கிறாய்?"

"பூட்டப்பட்ட ஒரு அறைக்குள் டாடி... இது எந்த இடம் என்றே புரியவில்லை... டாடி... தயவுசெய்து அந்த சந்திரமோகன் சொல்லும்படி நடந்து கொள்ளுங்கள் டாடி... இல்லையென்றால் என்னை... என்னை... ஐயோ!"

"டேய்..." என்று போனில் கத்தினார், பரமேஷ்வர். முகம் முழுவதும் வியர்வையில் நனைந்துவிட்டது. "என் மகளை விடுடா..."

மறுமுனைத் தொடர்பு எந்த பதிலும் சொல்லாமல் சட்டென்று அறுந்தது. பரமேஷ்வர் தன் முகத்தை கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

"டிரைவர்... வண்டியை எடு..."

" ஆஸ்பத்திரிக்கா ஸார்?"

"இல்லை... என் ஆபீஸிற்கு..." என்றார் பரமேஷ்வர், கண்களை அழுந்த மூடிக்கொண்டு.

tamil.com

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ பதினெட்டு ~

**ச**ந்திரமோகனை போலீஸின் பூட்ஸ்கால் நெம்பியது.

"எழுந்திரு"

கன்னங்களில், நெற்றிப்பொட்டுகளில் முகவாயில் திட்டுத் திட்டாய்க் கன்றிப் போன சிவப்புகள். விலா எலும்புகள் வலித்தன.

ஆனால் எல்லாவற்றையும் மீறி அவன் உதடுகளில் புன்னகை பூத்தது. காரணம் - அவனுக்காக ஜாமீன் காகிதங்களுடன் காவல் நிலையத்திற்கு வந்திருந்த பரமேஷ்வர்.

இன்ஸ்பெக்டரின் மேஜை மீது பிரித்து வைக்கப்பட்ட அச்சிட்ட தாளில் ஒரு பகுதி கட்டிக் காக்கப்பட்டது.

"இங்கே கையெழுத்து போடு..." டி.எஸ்.பி.யின் குரல் மிரட்டலாக வந்தது.

"வக்கீல் ஸார்... உங்கள் பேனாவைக் கொஞ்சம் இரவல் தருவீர்களா?" - சந்திரமோகன் நமுட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

பரமேஷ்வரின் பேனாவை வாங்கி கையெழுத்திட்டான். டி.எஸ்.பி. பரமேஷ்வர் பக்கம் திரும்பினார். "பரமேஷ்... நீ விசாரித்தாயே சி.எம். என்றால் யார் என்று? இவன்தான் அந்த சந்திரமோகன்! நீ தேடிய சந்திரமோகன்..."

"தெரியும்" என்று விறைப்பாக பதில் வந்தது. "வக்கீல் சார் கஸ்டடியில் இருக்கும்போது என்னை அடித்துத் துன்புறுத்திய போலீஸ் அதிகாரிகளுக்கு எந்த செக்ஷன் நம்பரின் கீழ் தண்டனை வாங்கித் தரப் போகிறீர்கள்?"

"ராஸ்கல்... வெளியே வா" என்றார் பரமேஷ்வர், கோபம் குறையாமல்.

* * *

காவல் நிலையத்திற்கு வெளியே வந்ததும், பரமேஷ்வர் தன் காரை நெருங்கினார்.

"டிரைவர்... நீ ஆட்டோ பிடித்து வீட்டிற்குப் போய் விடு... காரை நான் எடுத்துப் போகிறேன்..."

டிரைவர் அவரையும், சந்திரமோகனையும் மாறி மாறிப் பார்த்தான். காரிலிருந்து இறங்கிப் போனான்.

"ஏறு!" என்றார். சந்திரமோகன் ஏறினான். கைநீட்டி ஏ.ஸி. ஸ்விட்சைத் தட்டினான். "நீ நெருப்புடன் மறுபடி விளையாடுகிறாய்..."

"இருளை விலக்க நெருப்பு வேண்டியிருக்கிறது..."

"சொல்... அபிதா எங்கே?"

"அவள் பேசினாளா?"

"பேசினாள்... அவளை இருட்டு அறையில் அடைத்து வைத்திருக்கிறாய்!"

"அப்படியா சொன்னாள்?"

"என்னுடன் பேசும்போது அவளை உன் ஆள் பலமுறை அடித்தான்..."

"நிஜமாகவா? என்னை போலீஸ் அடித்ததை விட அதிகமாகவா அடித்தான்?"

"என் மகள் மீது கை வைத்ததற்கு நீ எப்படியெல்லாம் பதில் சொல்லப் போகிறாய் தெரியுமா?" அவர் குரல் உறுமியது. "என் மகளுக்கு ஏ.ஸி. இல்லாமல் தூக்கம் வராது... எங்கே அடைத்து வைத்திருக்கிறாய்?"

"உங்களுக்கு எட்டாத இடத்தில். அவளைத் தேடி நீங்களோ, போலீஸோ, பிரைவேட் ஏஜன்ஸியோ ஓரடி எடுத்து வைத்தாலும் அவளுக்குத்தான் நஷ்டம்..."

"நீ சொன்னபடிதான் உன்னை வெளியே கொண்டு வந்தாயிற்றே! இன்னும் என்ன? என் மகளை நான் உடனே பார்க்க வேண்டும்..."

"நான்கு வருடங்கள்! நீண்ட வருடங்கள்... நரகமான நான்கு முழு வருடங்களுக்கு மேல் நான் சிறையில் கிடந்தபோது என் அம்மாவும் இப்படித்தான் துடித்திருப்பாள், இல்லை? நான்கு மணி நேரம் கூட ஆகவில்லை அபிதா என்னிடம் வந்து. அதற்குள் இப்படித் தவித்துப் போகிறீர்களே!"

"சி.எம்., பிரச்சனை எனக்கும் உனக்கும்தான். இதில் குறுக்கில் என் மகளை ஏன் இழுக்கிறாய்?"

"நமக்குள் இன்னும் பிரச்சனை முடியவில்லையே. முடியும் வரை அவள் என் பாதுகாப்பில்தான் இருப்பாள்..."

"வாட் டூ யூ மீன்?"

"இன்னும் எழுபத்தியிரண்டு மணி நேரத்திற்கு நான் உங்கள் நிழலில்தான் இருக்கப் போகிறேன்... நீங்கள் எங்கே போனாலும் நானும் ஒட்டிக் கொண்டு அங்கே வருவேன்..."

"என்ன உளறுகிறாய்?"

"உங்களுக்கு வேறு வழி இல்லை... சுப்ரீம் கோர்ட் வரை நீங்கள் எனக்காக சாட்சி சொல்ல வேண்டிவரும்..."

"நீ என்னென்னவோ பேத்துகிறாய்! எனக்கு உடனே அபிதாவைப் பார்க்க வேண்டும்..."

"வாய்ப்பு இல்லை. அவளுடன் பேசலாம்... அதுவும் என் அனுமதி இருந்தால்... எனக்கு பசிக்கிறது. காலையில் சாப்பிட்ட டிபன் எல்லாம் போலீஸிடம் வாங்கிய அடியில் கரைந்துவிட்டது... ஒரு ஹோட்டலுக்கு வண்டியை விடுங்கள்..."

பரமேஷ்வர் பொறுமை இழந்தார். அவனைப் பார்த்து கையை ஓங்கினார். "உன் லிமிட்டைத் தாண்டுகிறாய்... என் சக்தி என்ன என்று மறுபடி பார்க்க ஆசையா? சுட்டுப் பொசுக்கி விடுவேன், ராஸ்கல்!"

"என் உயிர் போய்விட்டால் உங்கள் மகள் இருக்கும் இடத்தை அப்புறம் யார் சொல்வார்கள், வக்கீர் சார்?" சந்திரமோகன் சிரித்தான். "ஏதாவது உடுப்பி ஹோட்டலுக்கு வண்டியை விடுங்கள்..."

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"என் ஆட்கள் உன் கண்ணில் ஊசி ஏற்றி உண்மையை வரவழைக்க முடியும். ராஸ்கல்..."

"நான்கு வருடங்களில் எத்தனையோ அடிகள், உதைகள்... என் உடல் மரத்துவிட்டது பரமேஷ் சார்..." சந்திரமோகன் சுவாதீனமாக கை நீட்டி அவருடைய செல்போனை எடுத்தான். எண்களைத் தட்டினான்.

"ஹாய் அபி! உன் அப்பாவுடன் பேசுகிறாயா?"

பரமேஷ் பரபரப்பாக போனை வாங்கிக் கொண்டார்.

"அபிதா... டார்லிங்... எப்படிடா இருக்கிறாய்?"

"நீங்கள் சந்திரமோகன் சொல்வதைக் கேட்கும் வரை எனக்கு எந்த ஆபத்தும் இல்லையப்பா... ப்ளீஸ் டாடி... அதை மறக்காதீர்கள்..."

"உன்னை மறுபடி அடித்தார்களாம்மா?"

"இதுவரை இல்லை, டாடி..."

"கவலைப்படாதேம்மா... உன்னை ராணுவத்தை வைத்தாவது நான் மீட்டு விடுவேன், டார்லிங்..."

சந்திரமோகன் வாய்விட்டு சிரித்தான். எதிர்முனை தொடர்பு அறுந்துவிட்டது போலும். பரமேஷ்வர் ஆத்திரத்துடன் போனை அணைத்தார்.

"எந்த ஹோட்டலில் கொட்டிக் கொள்ள வேண்டும்?" என்றார்.

சந்திரமோகன் சிரிப்பை அடக்க முடியாமல் "வசந்தபவன்" என்றான். கார் நகர்ந்தது.

# ~ பத்தொன்பது ~

**ஹோ**ட்டலில் பரமேஷ்வரின் போன் ஒலித்தது. மசால் தோசையைக் கடித்துக் கொண்டிருந்த சந்திரமோகன் "எடுங்கள், பேசுங்கள்" என்று சைகை செய்தான், அவருடைய ஸெல்போனைக் காட்டி.

"மிஸ்டர் பரமேஷ்வர்?" என்னது அஸ்வினின் குரல்.

"யெஸ்..."

"அப்பா உங்கள் மீது ரொம்ப கோபமாயிருக்கிறார். உங்களை, ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னார். வரவில்லை. அவரைத் தாக்கிய சந்திரமோகனை ஜாமீனில் வேறு எடுத்திருக்கிறீர்கள்..."

பரமேஷ்வருக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

"எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கிறது" என்று மென்று விழுங்கிச் சொன்னார்.

"என்ன காரணமாய் இருந்தாலும் இன்னும் அரை மணி நேரத்திற்குள் அப்பாவை வந்து பார்க்காவிட்டால், எங்களுக்கும் எங்கள் கம்பெனிகளுக்கும் வேறு நல்ல அட்வகேட் பார்த்துக் கொள்ள வேண்டி வரும் என்று அப்பா சொன்னார்... வீட்டிற்கு வாருங்கள்." தொடர்பு அறுந்தது.

"யார்?" என்றான், சந்திரமோகன் பரமேஷ்வரின் முகத்தில் கிளர்ந்த பதட்டம் பார்த்து.

"கிருஷ்ணதாஸின் மகன்... அஸ்வின்... என் மீது அவர்கள் வெகு கோபமாயிருக்கிறார்கள்..."

"என்னாலா?"

"வேறு யாரால்?"

"சூடாக சர்க்கரை கம்மியாக ஒரு காப்பி" என்று சர்வரிடம் ஆர்டர் செய்துவிட்டு சந்திரமோகன் அவர் பக்கம் திரும்பினான். "எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கிறது என்று நீங்கள் புத்திசாலித்தனமாக பதில் சொன்னீர்கள்..."

"இன்னும் அரை மணி நேரத்திற்குள் கிருஷ்ணதாஸைப் பார்க்க நான் போய்ச் சேராவிட்டால் என் வேலை பறி போய்விடும்..."

"பார்க்கப் போகக் கூடாது என்று யார் சொன்னது? போய்ப் பாருங்கள்..."

"உன்னை வெளியே கொண்டு வந்ததற்காக என் முகத்திலேயே அவர் காறித் துப்புவதற்கா?"

"பொய்யை உண்மையாக்கவும், உண்மையைப் பொய்யாக்கவும் உங்களுக்கு சொல்லியா தர வேண்டும்? இருந்தாலும் எனது கருத்துக்களை நான் சொல்கிறேன்... உதவுமா என்று பாருங்கள்..."

சந்திரமோகன் காஃபியை உறிஞ்சிக் கொண்டே தன் திட்டத்தை விவரித்தான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ இருபது ~

**கே**ட்டில் இருந்த வாட்ச்மேன் பரமேஷ்வரின் காரைப் பார்த்ததும், பரபரப்பாக கேட்டைத் திறந்து விட்டான். போர்டிகோவில் நிறுத்தியதும் சாவியை ஒரு வேலைக்காரன் வாங்கிக் கொண்டான்.

கிருஷ்ணதாஸின் பர்சனல் செக்ரட்டரி புன்னகைத்தான். "சார் ரூமில் காத்திருக்கிறார்" என்றான்.

பரமேஷ்வர் படிகளில் ஏறி கிருஷ்ணதாஸின் பிரத்யேக அறைக் கதவைத் தட்டிவிட்டு நுழைந்தார். பெரிய மேஜைக்குப் பின்னே சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணதாஸின் முகத்தில் மூன்று இடங்களில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது. கிருஷ்ணதாஸின் கண்கள் பரமேஷ்வரைப் பார்த்து கனல் கக்கின. எதிர் நாற்காலியைக் காட்டினார், கிருஷ்ணதாஸ். பரமேஷ்வர் அமர்ந்தார்.

கிருஷ்ணதாஸின் பக்கத்தில் அவர் மகன் அஸ்வின் இன்னொரு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

"உங்கள் கோபம் நியாயமானதுதான்" என்றார் பரமேஷ்வர். " ஆனால் நான் செய்ததற்கு முக்கியமான காரணம் இருக்கிறது..."

அவருடைய சட்டைப் பாக்கெட்டில் செல்போன் இயக்கப்பட்டு முகம் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வெளியே காத்திருக்கும் சந்திரமோகன் இன்னொரு போனில் கேட்பதற்காக இந்த ஏற்பாடு. "பேசினால்தானே போனில் எனக்குக் கேட்கும் என்ற அசட்டுத் துணிச்சலில் நீங்கள் எந்தத் தகவலையாவது அவர்களுக்கு எழுதிக் காட்டுவது புத்திசாலித்தனமா, உங்கள் மகளுக்கு ஆபத்தை உண்டு பண்ணும் முட்டாள்தனமா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்" - சந்திரமோகன் மிரட்டியிருந்தான். கிருஷ்ணதாஸிற்காக அவசரப்பட்டு அபிதாவின் உயிருடன் விளையாட பரமேஷ்வருக்கு தைரியம் இல்லை.

"அப்படி என்ன காரணம்?" என்றான், அஸ்வின் பொறுமையில்லாமல்.

"இந்த வீடியோ கேசட்டைப் பாருங்கள்..."

அவர் கொடுத்த வீடியோ கேசட்டைக் குழப்பத்துடன் அஸ்வின் வாங்கினான். வி.சி.ஆர்.-ஐ இயக்கினான். காதம்பரியின் வீட்டிற்கு அவர் போய் இறங்குவதாக அமைந்த ட்ரைலர் காஸெட்.

"யார் இந்தப் பெண்?" கிருஷ்ணதாஸ் பேசியபோது அவர் உதடுகள் வலித்தன.

"காதம்பரி... ஊருக்கெல்லாம் கவனமாய் இருக்கச் சொல்லி நான் உபதேசம் செய்வேன்... கடைசியில் நானே முட்டாள்தனம் பண்ணி மாட்டிக் கொண்டுவிட்டேன்... இந்த காஸெட்டை என் மனைவிக்கு அவன் அனுப்பியிருந்தான். இது வெறும் முன்னோட்டம்தான். முழுநீள காஸெட்டை தனியார் சானல்களுக்கு விற்றுவிடுவேன் என்று என்னை மிரட்டினான். அந்த மிரட்டலுக்கு பயந்துதான் அவனை நானே ஜாமீனில் எடுக்க வேண்டி வந்தது... எனக்காக அவன் பேரில் கொடுத்திருக்கும் புகாரை நீங்கள் வாபஸ் வாங்கி விடுங்கள்.. இல்லையென்றால் என்னுடன் அவன் இருந்ததாக நான் கொடுத்த அறிக்கை பொய்யாகிவிடும்..."

"அந்த காஸெட்டுக்கு பயந்து அவன் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடப் போகிறீர்களா?"

"இல்லை... நெருப்பைத் தொட்டவனை நெருப்பு சும்மா விடாது என்று பதிலுக்கு நானும் சவால் விட்டிருக்கிறேன். ஒரிஜினல் கேஸட்டை அவனிடமிருந்து எப்படி வாங்குவது, அவனை எப்படி மறுபடி சிறைக்கு நிரந்தரமாக அனுப்புவது என்று என் மூளை யோசித்துக் கொண்டிருக்கிறது..."

"அதற்காக என்னை அடித்தவன் தப்பித்துப் போக நானே வாய்ப்பு தர வேண்டுமா?"

"போலீஸ் கொடுத்தால்தான் தண்டனையா?" பரமேஷ்வர் இறைஞ்சும் குரலில் பேசினார். "அவனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையை நாமே நேரடியாகக் கொடுக்கப் போகிறோம். அவன் சிறைக்குப் போகும்போது சக்கர நாற்காலியில் போக வேண்டும்..."

கிருஷ்ணதாஸ் சற்றே யோசித்தார். அவருடைய அத்தனை ரகசியங்களும் உள்ளும் புறமும் அறிந்த ஒரு வக்கீல்! கிருஷ்ணதாஸிற்காக எத்தனையோ முறை தன் தொழிலில் ஆபத்தான முடிவுகளை எடுத்தவர்!

சரி என்பது போல் தோள்களைக் குலுக்கினார். "ஆனால் அந்த சந்திரமோகனை சீக்கிரம் என்னிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று ஒரு வாக்கியத்தில் அந்த சந்திப்பை முடித்தார்.

பரமேஷ்வர் நன்றி சொல்லிவிட்டு எழுந்தார். "இரண்டு நாட்களுக்கு அந்த சந்திரமோகனை என் பார்வையிலேயே வைத்திருக்கப் போகிறேன் - காஸெட் தனியார் சானல்களுக்குப் போய்விடக் கூடாது என்பதற்காக" என்று ஒரு வாக்கியம் சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு பரமேஷ்வர் வெளியேறினார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ இருபத்தொன்று ~

**அ**டுத்ததாக வேறெங்கே நான் மண்டியிட வேண்டும்?" என்றார், பரமேஷ்வர் ஆத்திரத்தோடு! இயலாமையும், தோல்வியும் அவர்மீது சுமத்தியிருந்த கோபம் கண்டு சந்திரமோகன் புன்னகைத்தான்.

"உங்கள் வீட்டிற்கோ, அலுவலகத்திற்கோ போகிறோம்."

"எதற்கு?"

"நாம் இரண்டு பேரும் உட்கார்ந்து ஒரு பத்திரம் தயார் செய்ய வேண்டியிருக்கிறது..."

"பத்திரமா? என்ன உளறுகிறாய்?"

"ஒரு சிறந்த வக்கீலால்தான் சிறந்த பத்திரம் தயாரிக்க முடியும்... நீங்கள் கிரிமினல் லாயர்... சிவில் லாயர் அல்ல... ஆனால் இதற்காக இன்னொரு லாயரின் மகளையா நான் கடத்திக் கொண்டிருக்க முடியும்?"

"என்ன பத்திரம்? என் சொத்து முழுவதையும் உன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டுமா?"

"உங்கள் சொத்து இல்லை..."

"பின்னே?"

"நாம் உங்கள் ஆபீஸில் உட்கார்ந்து பேசலாமே... அதற்கு முன்... ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது... ஏதாவது ஐஸ்க்ரீம் பார்லருக்கு வண்டியை விடுங்களேன்..."

முகமெங்கும் காயமிருந்தாலும் இவனால் எப்படி சிரிக்க முடிகிறது? பரமேஷ்வர் ஆத்திரத்தோடு கியரைப் பொருத்தினார்.

"என்னதான் கிரேட் கிரிமினல் லாயராக இருந்தாலும் ஒரு முக்கியமான பாயிண்ட்டை கோட்டை விட்டு விட்டீர்களே!"

"என்ன?"

"அபிதா எங்கே என்று உங்களுக்குத் தெரியும்... ஆனால் உங்கள் மனைவிக்கு?"

"என்ன சொல்கிறாய்?"

"டென்னிஸ் விளையாட காலையில் போன மகள் இன்னும் திரும்பவில்லையே என்று உங்கள் மனைவிக்கு சந்தேகம் வந்து போலீஸிற்கு போன் செய்துவிட்டால்?"

"என்னைக் கேட்காமல் அப்படியெல்லாம் செய்ய மாட்டாள்"

"சில நாட்களுக்கு முன்பு வரை அப்படி இருந்திருக்கலாம்... உங்கள் மனைவி உங்களை தெய்வமாக நினைத்திருக்கலாம்... ஆனால் காதம்பரி காஸெட்டைப் பார்த்த பிறகும் அந்தப் பழைய மரியாதை அப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா என்ன?"

சந்திரமோகன் குறும்புச் சிரிப்போடு கேட்டாலும் கூட அதில் அர்த்தமிருப்பதாக பரமேஷ்வருக்குத் தோன்றியது.

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"இந்நேரம் அபிதாவே உங்கள் மனைவிக்கு போன் பண்ணி பேசியிருக்க வேண்டும். அவள் தோழி யாருக்கோ டென்னிஸ் கோர்ட்டில் ஹார்ட் அட்டாக் வந்து அவசரமாக டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனதாகவும், அங்கிருந்து அப்படியே அவளை அழைத்துக்கொண்டு பெங்களூர் போவதாகவும் சொல்லியிருக்கலாம். உங்கள் மூலம் மூன்று நான்கு செட் மாற்றுடைகளை தந்து விடச் சொல்லியிருக்கலாம்..."

"இதெல்லாம் உன் ஏற்பாடா?"

"எதையும் யோசித்து செய்ய வேண்டியிருக்கிறது சார். என்னை விட புத்திசாலிகள் நிறைந்த உலகம் இது. நான் கவனமாய் இருக்க வேண்டியிருக்கிறது அல்லவா? எதற்கும் ஒரு நடை உங்கள் வீட்டிற்குப் போய் பார்த்துவிட்டு அப்புறம் ஆபீஸ் போவோமே!"

"அபிதா கடத்தப்பட்டது தெரிந்தால் என் மனைவியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது... நிச்சயம் அவள் போலீஸில்தான் போய் நிற்பாள்..."

"அது அபிதாவிற்கு எவ்வளவு ஆபத்து! நாம் நேரத்தை வீணடிக்காமல் நகர்வோமே!"

பரமேஷ்வர் காரை வீட்டை நோக்கித் திருப்பினார்.

* * *

சந்திரமோகன் காரிலேயே காத்திருந்தான். பரமேஷ்வர் பரபரப்பாக இறங்கி வீட்டிற்குள் போனார். ஹால் மேஜை மீது ஒரு சிறு பயணப்பை தயாராக இருந்தது. அபிதாவின் பயணப்பை. அவரைப் பார்த்ததும் மனைவி ஜானகி பையை சுட்டிக் காட்டினாள்.

"அபிதா உங்களிடமும் பேசி விட்டாளா?" என்றாள்.

"பேசினாள்... " பரமேஷ்வர் தன் பரபரப்பை மறைத்துக் கொண்டார். "உன்னிடம் என்ன சொன்னாள்?" என்று கேட்டார்.

"அவள் தோழிக்கு திடீரென்று இதயவலியாம்... ஹாஸ்டலில் இருக்கும் பெண்... அதனால் பிளேனில் அவள் அப்பா அம்மா ஊருக்கு அழைத்துப் போகிறாளாம்... மூன்று நாட்களுக்கான உடைகள் தயாராய் வைத்திருக்கிறேன்.." என்று அந்தப் பயணப் பையை அவரிடம் தூக்கிக் கொடுத்தாள். "அபிதாவிடம் இந்தப் பையைக் கொடுக்கப்போகும்போது நானும் வரட்டுமா?"

"வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தார், பரமேஷ்வர். "நானே அவளை நேரில் பார்க்க முடியுமா தெரியவில்லை... யாரோ ஒரு டிரைவரை அனுப்பியிருக்கிறாள்... அவனிடம்தான் கொடுத்தனுப்பப் போகிறேன்..."

பயணப் பையை வாங்கிக் கொண்டு பரமேஷ்வர் அவசரமாக வெளியே வந்தார்.

சந்திரமோகன் அவரை ஆச்சரியப்படுத்தத் துவங்கியிருந்தான். எவ்வளவு தூரம் முன்யோசனையுடன் செயல்படுகிறான்! இவனிடம் வெகு கவனமாக இருக்க வேண்டும். அவனை முதலில் ஆழ்ந்து கவனித்து அவன் செயல்களிலிருந்து அவனுடைய பலவீனம் என்ன

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அவசரப்பட்டு எந்த அடியும் எடுத்து வைத்துவிடக் கூடாது.

* * *

பரமேஷ்வரின் வக்கீல் அலுவலகம். அவருடைய பிரத்யேக அறை. மிக செல்வாக்குள்ள வாடிக்கையாளர்கள் அமர்வதற்காக போடப்பட்ட உயர்ரக குஷன் நாற்காலியில் சந்திரமோகன் அமர்ந்திருந்தான்.

"மல்லையா என்பவரும், கிருஷ்ணதாஸ் அவருடை பார்ட்னராகவும் நடத்திக் கொண்டிருந்த 'மல்லையா லேத் ஒர்க்ஸ்' நினைவிருக்கிறதா?" என்றான், சந்திரமோகன். பரமேஷ்வரின் முகத்தில் ஒரு நிழல் ஓடியது.

"நினைவிருக்கிறது... இப்போது யாருக்குச் சொந்தம்?"

"மல்லையா இறந்த பிறகு அவர் குடும்பத்தாரிடம் கொடுத்தாயிற்று. அவர் அங்கு இறந்ததால் அந்தத் தொழிற்சாலையில் அவர் குடும்பத்தினருக்கு ஆர்வம் இல்லை... பங்கு பிரித்து கொடுத்தபின் இப்போது அது முழுக்க முழுக்க கிருஷ்ணதாஸிற்குத்தான் சொந்தமாய் இருக்கிறது."

"அந்தக் கம்பெனிக்கும் நீங்கள்தானே லீகல் அட்வைஸர்?"

"ஆமாம்!"

"கம்பெனியின் பர்ஸனல் மானேஜரையும் கூப்பிட்டுக் கேளுங்கள். அங்கு இப்போது இருக்கும் அத்தனை தொழிலாளர்களின் பெயர்கள்... மற்றும் ஐந்து வருடத்திற்கு முன்னால் ரங்கசாமி என்று ஒரு சீனியர் தொழிலாளி தொழிற்சாலை விபத்தில் மாட்டி இறந்தாரே... அந்த நாளில் தொழிற்சாலையில் வேலை செய்து அப்புறம் ஓய்வு பெற்ற தொழிலாளிகளின் பெயர்கள்... இரண்டையும் சேகரியுங்கள்..."

"சேகரித்து?"

"மல்லையா லேத் ஒர்க்ஸ் கம்பெனியின் அத்தனை பங்குகளையும் அந்தத் தொழிலாளர்களுக்கு சமமாகப் பிரித்துக் கொடுத்து தொழிற்சாலையை அவர்கள் அத்தனை பேருக்கும் கூட்டாக வழங்கப் போகிறார் கிருஷ்ணதாஸ்... அதற்கான பத்திரம்தான் நாம் இப்போது எழுதப்போகிறோம்..."

"உனக்கென்ன பைத்தியமா? கிருஷ்ணதாஸ் ஒரு நாளும் இதற்கு சம்மதிக்க மாட்டார்..."

"பத்திரம் எழுதப் போவது நாம். அவர் எப்படி சம்மதிப்பார், எப்படி கையெழுத்துப் போடுவார் என்பதற்கெல்லாம் பொறுப்பு நான்! பத்திரம் எழுதும்போது மறக்காமல் கிருஷ்ணதாஸ் இதையெல்லாம் சுய நினைவோடு, சொந்த புத்தியோடு எந்த வற்புறுத்தலும் இல்லாமல் எழுதிக் கொடுத்ததாக வாசகம் வர வேண்டும்... பத்திரம். மறுபடி மாற்ற முடியாதபடி இர்ரிவோக்கபில் (irrevocable) என்று சொல்வார்களே அந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்..."

"நீ போகாத ஊருக்கு வழி தேடுகிறாய்... கிருஷ்ணதாஸ் உயிரே போனால் கூட இந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போட மாட்டார்..."

"உயிரே போனால் கூட?" சந்திரமோகன் 'உயிரே'யை அழுத்திக் கேட்டான். பரமேஷ்வரின் பார்வை தடுமாறியது.

"அவர் உயிரைப் பற்றி அப்புறம் கவலைப்படுவோம்... முதலில் அபிதாவைப் பற்றி நாம் கவலைப்படுவோம்" என்று அவன் அடுத்து சொன்னதும் பரமேஷ்வர் பத்திரம் தயாரிப்பதற்கான சட்டப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டார்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ இருபத்தியிரண்டு ~

**கி**ருஷ்ணதாஸ் நாற்காலியில் களைத்து உட்கார்ந்திருந்தார். எதிரே டெலிவிஷனில் ஒரு பக்திப் படம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் காட்டப்பட்ட அம்மன் சிலையிடம் கிருஷ்ணதாஸ் கண்களை மூடி வேண்டினார்:

"தெய்வமே... என்னைக் காப்பாற்று... என் எதிரிகள் அத்தனை பேரும் அழிந்துபோக வழி செய்..."

பிரார்த்தனை முடிந்து கண் திறந்தால் காட்சி மாறி, சாத்தான் வேடம் போட்டவன் வேடிக்கையாக சிரித்துக் கொண்டிருந்தான். போன் ஒலித்தது. அவருடைய பிரத்யேக நம்பர். எடுத்தார்.

"நான் பரமேஷ் பேசுகிறேன்... ஒரு புதுக்குழப்பம்" என்றார் பரமேஷ்வர், மறுமுனையில்.

"என்ன?"

"சந்திரமோகனிடம் என்னைப் பற்றிய காஸெட் மட்டும் இருக்கிறது என்று நினைத்திருந்தேன். தப்பு... அஸ்வினும் வேறு யாரோ ஒரு பெண்ணும் இருக்கும் காஸெட் கூட வைத்திருக்கிறான். அதையும் அவனிடமிருந்து வாங்க வேண்டியிருக்கிறது... பேரம் பேசி முடித்துவிட்டேன்... இரண்டு லட்சம் கேட்கிறான்.." பரமேஷ்வரின் குரல் சற்று தழைத்தது.

"வாட் நான்சென்ஸ்!" கிருஷ்ணதாஸ் குரைத்தார்.

"தயவுசெய்து அஸ்வினை உடனே பணத்தோடு அனுப்புங்கள்..." பரமேஷ்வர் குரலை ரகசியமாக்கிக் கொண்டார். "காஸெட் நம் கைக்கு வந்ததும், இந்தப் பயலை என்ன செய்வது என்று நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்..."

"இரண்டு லட்சமா?" கிருஷ்ணதாஸின் நெற்றி சுருங்கியது.

"ஆமாம்... இரண்டே லட்சம்! அஸ்வினையே அனுப்புங்கள்" கிருஷ்ணதாஸ் ரிசீவரை வைத்தான். "அஸ்வின்!" என்று ஆத்திரத்துடன் கூவினார்.

* * *

பரமேஷ்வர் போனை வைத்தார். முகம் கடுகடுவென்று இருந்தது.

"அபிதாவின் உயிரைக் காட்டி நீ இன்னும் என்னென்ன காரியம் சாதித்துக் கொள்ளப் போகிறாய்?"

சந்திரமோகன் புன்னகைத்தான்.

"உங்களிடம் ரிவால்வர் இருக்கிறது என்று சொன்னீர்களே..."

"ரிவால்வர் எதற்கு?" பரமேஷ்வரின் முகம் திடுக்கிடலால் சிவந்து போனது.

"அஸ்வின் வரும்போது ஒரு விளையாட்டு காட்ட..."

"ஐம் ஸாரி.... உன் விளையாட்டுக்களுக்கெல்லாம் ஒரு லிமிட் இருக்கிறது. ரிவால்வரையெல்லாம் உன்னிடம் கொடுக்க நான் தயாராயில்லை. கிரிமினல் லாயர்கள் என்றால் அதையெல்லாமும் யோசிப்பார்கள் என்று நீ நினைக்கவில்லையா?"

"என்னிடம் இருக்கும் ரிவால்வர் உங்களுடையதுதானா என்று கேட்பதற்காகத்தான் அந்தக் கேள்வி கேட்டேன்..."

"என்ன பேத்துகிறாய்? என் ரிவால்வரை நீ எடுத்து விட்டாயா?"

"நோ... நோ..." சந்திரமோகன் தன் பையிலிருந்து ரிவால்வரை எடுத்து வெளியே அவர் மேஜை மீது வைத்தான். பரமேஷ்வரின் விழிகள் விரிந்தன.

"இது என்னுடையது போலவே இருக்கிறது!"

"எதற்கும் சீரியல் நம்பரை செக் பண்ணிவிடுங்கள்... இன்னும் தோட்டாக்கள் போடவில்லை..."

பரமேஷ்வர் பாய்ந்து ரிவால்வரை எடுத்தார். அவருடைய அந்தரங்கமான வாழ்க்கையை படம் எடுக்க முடிந்திருக்கிறது. காருக்குள் நுழைந்து ஸ்டிக்கர் ஒட்ட முடிந்திருக்கிறது. புத்திசாலி என்று நினைத்த மகளைக் கடத்த முடிந்திருக்கறது. இவனால் அவருடைய ரிவால்வரை ஏன் எடுத்திருக்க முடியாது? என்ற அச்சத்தினால் வந்த வேகம் அது. ரிவால்வரைக் கையில் பிடித்துப் பார்த்ததும் பெருமூச்சு ஒன்று அவரிடமிருந்து விடுபட்டது.

"இது என்னுடையது இல்லை..." என்று மேஜை மீது திருப்பி வைத்தார். சந்திரமோகன் அதை எடுத்துக்கொண்டான். தோட்டாக்களை நிரப்பினான். பரமேஷ்வர் அவனை அச்சத்துடன் பார்த்தார்.

"என்ன செய்யப் போகிறாய்?"

சந்திரமோகன் சிரித்தான்.

"எந்த உயிருக்கும் என்னால் ஆபத்து வராது என்று முன்பு போல் என்னால் இப்போது எந்த உத்தரவாதமும் தர முடியாது... என் பேச்சைக் கேட்கும் வரை நான் சாதுவாய் இருப்பேன் என்று மட்டும்தான் சொல்ல முடியும்..." என்று தன் இடுப்பில் செருகிக் கொண்டான்.

"ஒரு வேலை அஸ்வின் ஆயுதம் ஏதாவது எடுத்து வந்தால் நான் முட்டாளாகி விடக் கூடாதே என்றுதான் இந்த முன்னெச்சரிக்கை..." என்றான், தொடர்ந்து.

"அஸ்வினை எதுவும் செய்துவிடாதே!"

"செய்ய மாட்டேன்... ஆனால் அவனை ஒத்துழைக்க வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு... ஒரு வேளை அவன் முரண்டு பிடித்து தகராறு செய்து நான் தாக்க வேண்டி வந்தாலும்... இந்தத் துப்பாக்கி உங்களுக்கு எதிரான சாட்சியாகி விடும்..."

"என்ன உளறுகிறாய்?"

"தி கிரேட் கிரிமினல் லாயராயிருந்தாலும், நீங்களும் சாதாரண மனிதர்தான். சீக்கிரம் உணர்ச்சிவசப்படுகிறவர்தான் என்று நிரூபித்து விட்டீர்களே! துப்பாக்கி உங்களுடையதா என்று பார்க்க கையில் எடுத்தீர்களே... அப்போது உங்கள் கைரேகை பதிந்து விட்டது..."

"அதற்கப்புறம் நீ எடுத்தபோது உன் கைரேகையும் பதிந்துவிட்டது, நண்பா!"

"ஆனால் என் சரும நிறத்திலேயே சுருக்கங்கள் இல்லாத ஒரு மெடிக்கல் கிளவுஸை நான் அணிந்திருப்பதை நீங்கள் கவனிக்கத் தவறிவிட்டீர்களே லாயர்!"

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"ராஸ்கல்!" நாற்காலியிலிருந்து பரமேஷ்வர் பாதி எழுந்துவிட்டார். அப்புறம் ஓய்ந்து உட்கார்ந்தார். அவனே அவரை சுட்டுவிட்டு தற்கொலை என்று சொன்னாலும் சொல்வான். துப்பாக்கியின் விசையில் அவர் ரேகை பதிந்திருந்தது. அது போதும்!

அறைக் கதவைத் தட்டிவிட்டு திறந்தான், அஸ்வின். எட்டிப் பார்த்தான்.

"உள்ளே வா" என்றார் பரமேஷ்வர், வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன்.

அஸ்வின் சந்திரமோகனை சந்தேகமாகப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான். அந்த அறையின் கண்ணாடித் தடுப்புகள் எல்லாவற்றையும் மறைத்து திரைகள் தொங்கின. அஸ்வின் இறுகிய முகத்துடன் மேஜையை நெருங்கினான்.

"முன்பிருந்த கூர்மை உங்களிடம் இல்லை என்று அப்பாக்கு வருத்தம்" என்றான், "காரியங்களை சொதப்புகிறீர்கள்... கண்டவனிடமெல்லாம் கை கட்டி உட்கார்ந்திருக்கிறீர்கள்..."

நான்கு ஐநூறு ரூபாய்க் கட்டுகளை மேஜை மீது போட்டான். "இரண்டு லட்சம்... அந்தக் காஸெட்டை நான் பார்க்க வேண்டும்..."

"காஸெட்டைப் பார்க்கும் முன் இதைப் பார்...."

சந்திரமோகன் கையில் திடுக்கென்று முளைத்த ரிவால்வரைப் பார்த்து அஸ்வின் திகைத்தான்.

"உன் கைகளை கழுத்துக்குப் பின்னால் சேர்த்துக் கொண்டு முதலில் இந்த நாற்காலியில் வந்து உட்கார்..."

அஸ்வினின் கண்களில் கண நேரத்திற்கு அச்சம் வந்தது. "உட்காராவிட்டால்?" என்றான் கோபமாக.

"வக்கீல் சார்... இவர் ஒத்துழைக்க மறுத்தால் என்ன ஆகும் என்பது உங்களுக்குத் தெரியும்..."

"தெரியும்... அஸ்வின்... உட்காரத்தானே சொல்கிறான்... உட்கார்ந்து விடேன்..." என்று பரமேஷ்வர் பதறினார், துப்பாக்கியில் பதிந்திருப்பது அவர் கைரேகையாயிற்றே!

அஸ்வின் அமர்ந்ததும் புறங்கையை அவன் கன்னத்தில் வீசினான் சந்திரமோகன்.

"சொன்னால் உடனே கேள்" என்றான், ஆக்ரோஷமாக.

"வக்கீல் சார்... இவன் அசையாதபடி நாற்காலியோடு கட்டிப் போட வேண்டியது உங்கள் பொறுப்பு..." என்று நைலான் கயிற்றை அவரிடம் போட்டான். பரமேஷ்வர் சற்றே யோசித்துவிட்டு வேறு வழியின்றி அந்தக் கயிற்றை எடுத்தார்.

"இதற்கெல்லாம் என் அப்பாவிடம்..." என்று அஸ்வின் ஆரம்பித்ததும் அவன் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி வட்டத்தைப் பொருத்தினான், சந்திரமோகன்.

"இதைப் பார்... ஏற்கெனவே உன் அப்பாவே சாட்சி சொன்னார். அதை உண்மையாக்குவதற்காக நான் இப்போது கொலை செய்யவும் தயங்க மாட்டேன் என்பதுதான் உண்மை. தயவு செய்து என்னை ஆக்ரோஷப்படுத்தாதே..."

"ஆமாம், அஸ்வின்..." பரமேஷ்வரும் பதறினார். "சந்திரமோகன் சொல்கிறபடி தயவு செய்து ஒத்துழை..."

அஸ்வின் அவரை நம்ப முடியாமல் பார்த்தான். பரமேஷ்வர் அவனை நாற்காலியோடு கட்டிப்போட ஆரம்பிக்க, அஸ்வினின் பையிலிருந்த ஒரு சிறு கத்தியையும், இடுப்பு பெல்ட்டையும் கழற்றினான் சந்திரமோகன்.

பரமேஷ்வர் கட்டுப்போட்டு முடித்ததும், ரிவால்வரை அவன் நெற்றிப் பொட்டிலிருந்து எடுக்காமலேயே, "இப்போது நான் சொல்வதுபோல் உன் அப்பாவிடம் பேசு" என்று தொலைபேசியை எடுத்து எண்களைத் தட்டினான். பரமேஷ்வரிடம் நீட்டினான். "முதலில் நீங்கள் பேசுங்கள்."

மறுமுனையில் கிருஷ்ணதாஸின் குரல் வந்ததும், பரமேஷ்வர் எச்சிலைக் கூட்டி விழுங்கினார்.

"நீங்கள் உடனே இங்கே வர வேண்டியிருக்கிறது" என்றார்.

"எதற்கு?"

"அஸ்வினைப் மீட்டுப் போவதற்காக..."

"என்ன உளறுகிறீர்கள்?"

"கிருஷ்ணதாஸ்... தயவுசெய்து கோபப்படாதீர்கள்... சந்திரமோகன் நம்மைவிட சக்தி வாய்ந்தவனாக இருக்கிறான். அஸ்வினின் உயிருக்கே இப்போது ஆபத்து... அவனைத் துப்பாக்கி முனையில் மடக்கி வைத்திருக்கிறான்... உங்களிடமிருந்து சில ஆட்டோகிராப் வாங்கியபின்தான் விடுவிப்பானாம்..."

"உங்களுக்கென்ன பைத்தியமா?"

"அஸ்வினிடம் பேசுங்கள்."

"அப்பா..."

"அஸ்வின்! என்ன ஆயிற்று?"

"பரமேஷ்வர் என்னை அசையவிடாமல் நாற்காலியோடு கட்டிப் போட்டிருக்கிறார், அப்பா. சந்திரமோகன் என் நெற்றியில் ஒரு துப்பாக்கியைப் பதித்திருக்கிறான். நீங்கள் நேரில் வருவதைத் தவிர வேறு வழியில்லை..."

"சந்திரமோகனிடம் போனைக் கொடு" என்றார், கிருஷ்ணதாஸ் கோபமாக.

சந்திரமோகன் கைக்கு ரிசீவர் மாறியது.

"சந்திரமோகன்... நீ உன் உயிருடன் விளையாடுகிறாய்..." என்று கிருஷ்ணதாஸ் உறுமினார்.

"நீங்கள் விளையாடாத விளையாட்டா? எத்தனை எத்தனை உயிர்களுடன் விளையாடினீர்கள்... இப்போது என் விளையாட்டு ஒரே ஒரு உயிரிடம்தானே..."

"உன்னை... உன்னை..."

"மற்ற கோபத்தையெல்லாம் நேரில் காட்டுங்கள்..." சந்திரமோகன் ரிசீவரை வைத்தான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

கிருஷ்ணதாஸ் அந்த அலுவலக அறைக்குள் நுழைந்தபோது, கொதித்துக் கொண்டிருந்தார்.

"பரமேஷ்... எல்லாவற்றுக்கும் நீங்களும் உடந்தையா? என் சக்தி என்ன... என் கைகளின் நீளம் என்ன என்பதையெல்லாம் மறந்து விட்டீர்களா?"

அந்தப் பெரிய அறையின் ஒரு மூலைக்கு அஸ்வினின் நாற்காலி நகர்த்தப்பட்டிருந்தது. நாற்காலியோடு அவன் அழுத்தமாகக் கட்டிப் போடப்பட்டிருந்தான். மார்புக்குக் குறுக்கே எக்ஸ் வடிவத்தில் கட்டப்பட்ட கயிற்றுக்குப் பின்னே செவ்வகமாக ஒரு கறுப்புப் பெட்டி. அதில் டிஜிட்டல் எண்கள் 00:45 என்று ஒளிர்ந்து கொண்டிருந்தன.

சந்திரமோகன் புன்னகையுடன் கிருஷ்ணதாஸை வரவேற்றான்.

"என்ன பார்க்கிறீர்கள்? அஸ்வினோடு சேர்த்துக் கட்டப்பட்டிருப்பது ஒரு ரிமோட் வெடிகுண்டு. அதை இயக்கும் விசை இதோ! இப்போது நாற்பத்தைந்து வினாடி என்று காட்டிக் கொண்டிருக்கிறதே, நான் விசையை அழுத்தியதும் அது ஒவ்வொரு விநாடியாகக் குறைய ஆரம்பிக்கும்... நீங்கள் மகா பெரியவர்... என்னைப் பார்க்க வரும்போது சும்மா வருவீர்களா அல்லது நூறு அடியாட்களை அழைத்து வருவீர்களா என்று எனக்கு எப்படித் தெரியும்? அதனால் என்னைக் காப்பாற்றிக் கொள்ளவே இந்த ரிமோட் வெடிகுண்டு! என்னைக் கைப்பற்றப் பார்த்தாலோ, தீர்த்துக்கட்ட முயற்சி செய்தாலோ நான் இந்த மோதிரத்தை அழுத்தினால் போதும் - அடுத்த விநாடியில் அஸ்வினின் நெஞ்சுக்கூடு சிதறிவிடும்..."

"உனக்கு என்னதான் வேண்டும்?"

"சில கணக்குகள் நேர் செய்யப்பட வேண்டும்... சில கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும்... பரமேஷ்வர் உங்களுக்கு எல்லாவற்றையும் விளக்குவார். விளக்கி முடித்ததும் நான் இந்த விசையை அழுத்துவேன்... நாற்பத்தைந்து வினாடிகள் உங்களுக்குக் கிடைக்கும்... அதற்குள் உங்கள் முடிவை நீங்கள் சொல்ல வேண்டியிருக்கும்... நீங்கள் சொல்லும் முடிவுதான் அஸ்வினின் ஆயுளைத் தீர்மானிக்கும்" சந்திரமோகன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஒன்றன் மீது ஒன்று போட்டுக் கொண்டான்.

# ~ இருபத்திமூன்று ~

**கி**ருஷ்ணதாஸ் அக்னி கக்கும் பார்வையை சந்திரமோகன் மீது எறிந்தார்.

"அந்த கம்பெனியின் இன்றைய மதிப்பு தெரியுமா உனக்கு? போன மாதம்தான் புதிதாக வெளிநாட்டிலிருந்து வாங்கிய இயந்திரங்களுக்கான கடனே வங்கியில் அடைத்து முடிக்கப்பட்டது! மல்லையாவின் பங்கு பூராவையும் அவருடைய குடும்பத்தாருக்கும் கொடுத்தாயிற்று. இப்போது அந்தக் கம்பெனியின் ஒவ்வொரு ஆணியும், ஸ்குரூவும் என்னுடையது. அதையெல்லாம் அப்படியே தூக்கி தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தரச் சொல்கிறாயே... இது என்ன தண்ணீர்ப் பந்தலா?"

"சும்மா தரப் போவதில்லை... பதிலுக்கு உங்களுக்கு பேரும், புகழும் வரப் போகிறதே!"

"வாட் டு யூ மீன்?"

"இன்றைக்கு மாலை பத்திரிகையாளர்கள், டெலிவிஷன் நிருபர்கள் எல்லோரையும் ஒரு பிரஸ் மீட்டிங்கிற்குக் கூப்பிடப் போகிறீர்கள். அங்கே மல்லையா லேத் ஒர்க்ஸ் நிர்வாகத்தை, உரிமைகளை, பங்குகளை எல்லாம் தொழிலாளர்கள் பெயருக்கு நீங்கள் மாற்றித் தருவதை அறிவிக்கப் போகிறீர்கள். இவ்வளவு செல்வாக்குள்ள, லாபகரமான ஒரு தொழிற்சாலையை தொழிலாளர்களுக்கு ஒரு முதலாளி மாற்றித் தருகிறார் என்றால், அவர் புகழ் எவ்வளவு உயரும் என்று யோசியுங்கள்..."

"பிரஸ் மீட் எதற்கு?" என்றார் பரமேஷ்வர், கோபமாக. நாளைக்கு கிருஷ்ணதாஸ் மனம் மாறிவிடக்கூடாதே என்பதற்காகத்தான்! அத்தனை செய்தித்தாள்களிலும், செய்தி சானல்களிலும் தொழிலாளர்கள் பெயருக்கு திரு கிருஷ்ணதாஸ் தன் தொழிற்சாலையை மாற்றிக் கொடுத்தது பற்றி அறிவிப்பு வந்துவிட வேண்டும்... பின்னால் உங்களை நான் வற்புறுத்தி வாங்கியதாகவோ, ஏமாற்றி வாங்கியதாகவோ நீங்கள் கோர்ட்டில் சொல்லக் கூடாது பாருங்கள்" - சந்திரமோகன் சொல்லச் சொல்ல கிருஷ்ணதாஸின் புருவங்கள் நெரிபட்டன. ஆத்திரத்துடன் எழுந்தார். சந்திரமோகன் மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பற்றினார்.

சந்திரமோகனுக்கு மூச்சு தடைபட்டது. ஆனாலும், புன்னகையுடன் தன் மோதிரத்தை உயர்த்திக் காட்டினான்.

"அப்பா!" என்று நாற்காலியிலிருந்து அஸ்வின் கத்தினான்.

தன் நிலை புரிந்தவராக கிருஷ்ணதாஸ் உடனே தன் கையை சந்திரமோகனிடமிருந்து விலக்கினார்.

"இந்த நிமிடத்தில் உன் கை ஓங்கியிருக்கலாம்... ஆனால் என்னைப் பகைத்துக் கொண்டவனுக்கு நிம்மதி இல்லை..."

"என்னைத் திட்டாதீர்கள்... காஸெட்டிற்கு நான் கேட்டது அதிக விலைதான். வக்கீல்தான் இந்த ஐடியாவே எனக்குக் கொடுத்தார். இத்தனை சட்டப் புத்தகங்களை வைத்துக்கொண்டு பத்திரம் தயாரித்தவரே அவர்தான்... பிரஸ்மீட்டிற்கு ஏற்பாடு பண்ணச் சொல் என்று அறிவுறுத்தியதும் அவர்தான்... இல்லை என்று அவர் மகள் மீது சத்தியம் செய்யச் சொல்லுங்கள்..."

சந்திரமோகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"பரமேஷ்!" கிருஷ்ணதாஸ் பொருமினார்.

"நான் ரிமோட் விசையை அழுத்தியாயிற்று. கையெழுத்துகள் போட நாற்பத்தைந்து வினாடிகள்தான் இருக்கின்றன, மிஸ்டர் கிருஷ்ணதாஸ்...."

கிருஷ்ணதாஸ் அவசரம் அவசரமாக பத்திரத் தாள்களில் கையொப்பங்கள் இட்டார். போட்டு முடித்து நிமிர்ந்தார்.

நாற்பது வினாடிகளில் அந்த விசையை மறுபடி சந்திரமோகன் அழுத்த வினாடிகளை காட்டிக் கொண்டிருந்த கறுப்புப் பெட்டி 00:05 என்று நின்றது. நிம்மதிப் பெருமூச்சு விடுபட்டன.

"இவன் சொன்னதை நம்பாதீர்கள்..." என்றார் பரமேஷ்வர், சின்ன பதட்டத்துடன்.

"பிரஸ் மீட் முடிந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் வசம் போய்ச் சேரும்வரை அஸ்வின் என் பாதுகாப்பில்தான் இருப்பான்" என்றான் சந்திரமோகன்.

கிருஷ்ணதாஸ் அவனை எரித்து விடுவது போல் பார்த்தார். பின் பரமேஷ்வரைப் பார்த்தார். கடைசியாகத் தன் மகன் அஸ்வினைப் பார்த்தார்.

"நீ ஒழுங்காக இருந்திருந்தால், இந்த பிரச்சனையெல்லாம் வந்திருக்காது" என்று சீறிவிட்டு வெளியேறினார்.

* * *

"...எனவே மல்லையா லேத் ஒர்க்ஸ் என்ற என் தொழிற்சாலையை முற்றிலுமாக தொழிலாளர்களுக்கே கொடுத்து விடுவது என்று தீர்மானித்து உள்ளேன்...

"இது என் மகன் அஸ்வினுடைய விருப்பம்... இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவனே நேரில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான், ஆனால் கடுமையான தொற்றுக் காய்ச்சலால் அவனால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது...

"இந்த முடிவை நான் முழு விருப்பத்துடன், தொழிலாளர்களிடமிருந்து எந்த நெருக்கடியும் இல்லாமல் செய்கிறேன்... சில வருடங்களுக்கு முன் இதே தொழிற்சாலையில் ஒரு விபத்தில் ரங்கசாமி என்பவர் இறந்து போனார். அவருடைய மகனுக்கு இங்கே வேலை கொடுத்தோம்... அந்த மகன் இப்போது இந்த தொழிற்சாலையில் ஒரு பங்குதாரதாக ஆகிவிட்டார் என்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது..."

கிருஷ்ணதாஸ் நிறுத்தினார். திரும்பிப் பார்த்து காக்கி உடை அணிந்திருந்த அந்த தொழிலாளியைக் கூப்பிட்டார்.

"இதோ இவர்தான் தங்கசாமியின் மகன்... இவரிடம் இந்தக் கம்பெனியின் உரிமையை தொழிலாளர்களுக்கு மாற்றித் தரும் பத்திரத்தை வழங்குகிறேன்..."

கூடியிருந்தவர்கள் கை தட்டினார்கள். விடியோ கேமராக்கள் அந்தக் காட்சியை ஜூம் செய்தன. ஸ்டில் கேமிராக்கள் ஃபிளாஷ் வெளிச்சத்தைப் படபடவென்று மின்னிக் காட்டின.

கிருஷ்ணதாஸ் எரிமலைக் குமுறல்களை அடக்கிக் கொண்டு வெளியே ஆனந்தமாகப் புன்னகைத்தார். தொழிலாளர்களின் கை தட்டல்கள் வான் வரை மோதின.

# ~ இருபத்திநான்கு ~

**போ**துமா? நீ கேட்டது எல்லாமே செய்தாயிற்று... என் அபிதா எங்கே?" என்றார், பரமேஷ்வர். கிட்டத்தட்ட கெஞ்சும் குரலில்.

"இன்னும் ஒன்றே ஒன்று பாக்கி இருக்கிறது..." என்றான், சந்திரமோகன், புன்னகையுடன்.

பரமேஷ்வரின் கண்களில் தீப்பொறி பறந்தது.

"இன்னும் என்ன?"

"வாக்குமூலம்... உங்களுடைய வாக்குமூலம்..."

"என்ன உளறுகிறாய்?"

"மல்லையாவை உண்மையில் கொன்றது கிருஷ்ணதாஸ்தான் என்று உங்களுக்குத் தெரியும்... ஆனாலும் மூன்று சாட்சிகளை செட்டப் பண்ணி என்னை சிறைக்கு அனுப்பினீர்கள். அதற்காக உங்களுக்கு பெரிய பதவியும் நிறைய சலுகைகளும் கிடைத்தன. அதற்கப்புறம், கிருஷ்ணதாஸுடன் சேர்ந்துகொண்டு இன்னும் எத்தனையோ அக்கிரமங்களுக்குத் துணை போயிருந்தீர்கள்... அதற்கெல்லாம் ஒரு முடிவு வர வேண்டாமா?"

"இதோ பார்... உன் மிரட்டலுக்குப் பணிந்து கிருஷ்ணதாஸ் தொழிற்சாலையையே எழுதி வைத்துவிட்டார்... அதற்கப்புறம்தான் நீ அஸ்வினை விடுவித்தாய்... அஸ்வின் விடுதலையான பின், அவர் உன் மீது எவ்வளவு ஆத்திரத்துடன் இருப்பார் என்று யோசி... எந்நேரமும் உன் உயிருக்கு ஆபத்து வரலாம்... அதற்கு முன் என் மகள் இருக்கும் இடத்தைச் சொல்லிவிடு..."

"சரி... ஒரே ஒரு கேள்வி..."

"என்ன?"

"உங்களுக்கு காதம்பரி பெரிசா, உங்கள் மகள் பெரிசா?"

"இதென்ன கேள்வி? காசு கிடைத்தால் நாளைக்கே என்னை உதறிவிட்டு காதம்பரி வேறொருத்தன் பின்னால் போய்விடுவாள். என்றைக்கிருந்தாலும், எனக்கு அபிதாதான் முக்கியம்..."

"அப்படியானால் ஒரே ஒரு சின்ன உதவி செய்யுங்கள். என்னைத் தேடி கிருஷ்ணதாஸின் கூட்டம் வரும்போது நான் இங்கே இருக்க விரும்பவில்லை... உங்களை உங்கள் மகளிடம் சேர்த்துவிட்டு நான் போலீஸிடம் சரணடைய விரும்புகிறேன்... இன்னும் அரைமணி நேரம் கழித்துப் போலீஸ் என்னை காதம்பரியின் வீட்டில் வந்து சந்திக்கட்டும். போலீஸிற்கு உடனே போன் செய்யுங்கள்"

"என்னவென்று?"

"காதம்பரியின் முகவரியை அவர்களிடம் கொடுங்கள். கிருஷ்ணதாஸைத் தாக்கிய குற்றத்திற்காக நான் போலீஸில் சரணடைய விரும்புவதாகவும், அந்த முகவரிக்கு வரும்படியும் சொல்லுங்கள்... ஆனால் அரை மணிநேரம் கழித்து வரச் சொல்லுங்கள்..."

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

பரமேஷ்வர் தொலைபேசியை எடுத்து டி.எஸ்.பி. கஜேந்திரனுக்கு போன் செய்தார்.

"அடுத்த போன் கிருஷ்ணதாஸிற்கு பண்ணுங்கள்"

"கிருஷ்ணதாஸிற்கா?"

" ஆமாம்... நான் போலீஸில் சரணடைய முடிவு செய்துவிட்டதாகவும், காதம்பரி வீட்டிற்கு அரை மணி கழித்து போலீஸை அங்கே வரச் சொல்லியிருப்பதாகவும் மட்டும் சொல்லி வைத்து விடுங்கள்..."

"உனக்கென்ன பைத்தியமா? கிருஷ்ணதாஸ் கையில் சிக்கினால் உன்னை தவிடுபொடியாக்கி விடுவார்..."

"சொன்னதைச் செய்யுங்கள். உங்கள் மகளை உடனே பார்க்க உங்களுக்கு விருப்பமில்லையா?"

பரமேஷ்வர் போனை எடுத்தார்.

* * *

கிருஷ்ணதாஸ் முகம் சிவந்திருந்தது. பரமேஷ்வர் பேசி முடித்ததும், ரிசீவரை பொத்தென்று வைத்தார்.

"ராஸ்க்கல்... என்னை அடித்துவிட்டு அசிங்கப்படுத்திவிட்டு போலீஸில் போய் சரணடையப் போகிறானாம்! விடப் போவதில்லை அவனை..."

"எங்கேயிருக்கிறான் என்று சொல்லுங்கள் அப்பா... நம் ஆட்களை உடனே அனுப்பி அவனைத் தீர்த்து விடச் சொல்கிறேன்..." என்று உறுமினான் அஸ்வின்.

"வேண்டாம்... உன்னை மறுபடி அனுப்பி நான் எந்த ரிஸ்க்கும் எடுக்கப் போவதில்லை.... நானே நேரில் போ கிறேன்... என்னைக் கட்டிப் போடும் தைரியம் அந்த பரமேஷ்வருக்கு வருகிறதா பார்ப்போம்..."

"தனியாகவா போகிறீர்கள்?"

"அந்த முட்டாள்தனத்தை நான் செய்யப் போவதில்லை.. என் பாதுகாப்புப் படையும் கூட வரும்..."

கிருஷ்ணதாஸ் போனை எடுத்து எண்களை பட்பட் என்று தட்டினார்.

"டி.எஸ்.பி. கஜேந்திரன்? கஜா... நான் கிருஷ்ணதாஸ்... அந்தப் பயல் சரணடையப் போகிறானாமே!"

"ஆமாம்" என்று பதில் வந்தது.

"போலீஸ் வரும் முன் எனக்கு அவனிடம் கொஞ்சம் கணக்கு பாக்கி இருக்கிறதே!"

"என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்..."

"நான் போன் செய்து பச்சை சிக்னல் கொடுத்த பிறகு போலீஸ் சந்திரமோகனை தேடிப் போகிற மாதிரி பார்த்துக் கொண்டால் போதும்..."

"உங்களுக்கு இதைக் கூட செய்ய மாட்டேனா?"

கிருஷ்ணதாஸ் ரிசீவரை வைத்துவிட்டு கண்ணாடியில் முகம் பார்த்தார். பிளாஸ்திரிகளைப் பார்த்ததும் அவர் இதயம் முறுக்கேறியது.

சந்திரமோகனின் முகத்தைத் தாறுமாறாகக் கிழித்தால்தான் அவர் மனம் சமாதானம் ஆகும் என்று தோன்றியது.

பெல்ட்டில் கூர்மையான கத்தியை செருகிக் கொண்டார். தன் ரிவால்வரை எடுத்துக் கொண்டார். தன் பாதுகாப்புப் படை தளபதிக்கு இன்டர்காமில் உத்தரவு கொடுத்தார்.

* * *

காரை நிறுத்தினான் சந்திரமோகன். பின் இருக்கையில் உட்கார்ந்திருந்த பரமேஷ்வரைத் திரும்பிப் பார்த்தான்.

"உங்கள் மகள் இருக்கும் இடத்திற்கு வந்து விட்டோம்..." என்றான்.

"அப்படியானால் என் கண்கட்டை அவிழ்க்கலாமா?" என்று பரபரத்தார் பரமேஷ்வர்.

"ஒரு நிமிஷம்... அதற்கு முன் உங்கள் கைகளை நான் அவிழ்த்துவிட வேண்டுமே!"

சந்திரமோகன் பின்கதவு திறந்து அவர் அருகில் அமர்ந்தான்.

பரமேஷ்வரின் கைகளை மடியில் வைத்துக் கட்டியிருந்த நைலான் கயிற்றின் முடிச்சை அவிழ்த்தான். பரமேஷ்வர் துடிப்புடன் தன் கைகளைக் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவசரமாக விலக்கினார். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு பார்வை பழகியதும், திடுக்கென்றிருந்தது.

"ஏய்! இங்கே ஏன் அழைத்து வந்தாய்? இது காதம்பரியின் வீடு!"

"ஆமாம்... அதனால்தான் உங்கள் கண்களைக் கட்டி அழைத்து வர வேண்டியிருந்தது... இங்கேதான் அபிதா இருக்கிறாள்" என்று புன்னகைத்தான், சந்திரமோகன்.

"அ...பி...தா... இங்கே இருக்கிறாளா? என்ன சொல்கிறாய்? அவளிடம் காதம்பரியைப் பற்றி சொல்லிவிட்டாயா? காதம்பரியும் உனக்கு உடந்தையா?"

"நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்."

பரமேஷ்வர் உடல் குறுகினார். உள்ளம் கூசினார். அந்தத் தோட்டத்தில் காலடி வைக்க அவமானமாய் உணர்ந்தார். அபிதாவை இங்கேயா சந்திக்கப் போகிறார்? ஆனால் வேறு வழி? இறங்கினார்.

சந்திரமோகன் அழைப்பு மணியை இரண்டு முறை அழுத்தினான். கதவு உடனே திறந்தது.

திறந்தவள் - அபிதா: அவளைப் பார்த்ததும், பரமேஷ்வரின் கண்கள் பொங்கின. "கண்ணம்மா" என்று அவளை அனைத்துக் கொள்ள பாய்ந்தார்.

அபிதா சரேல் என்று பின்னால் நகர்ந்து கொண்டாள். அவள் கண்களில் தெரிந்த அருவருப்பைப் பார்த்ததும். பரமேஷ்வரின் நெஞ்சில் நெருப்பு வைத்தாற் போலிருந்தது.

"அபிதா!" என்றார், திடுக்கிடலோடு.

"உள்ளே போவோம்" என்றான் சந்திரமோகன்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

வேறு வழியின்றி உள்ளே நுழைந்தார். சோபாவில் ஒரு ஓரமாக முடங்கி உட்கார்ந்திருந்த காதம்பரி அவரை நிமிர்ந்து பார்த்து உடனே தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அபிதா!" பரமேஷ்வரின் குரல் நடுங்கியது. "இவன் என்னைப் பற்றி ஏதாவது சொன்னானா? அப்படிச் சொல்லியிருந்தாலும் அதையெல்லாம் நம்பாதே!"

"எதை நம்பக் கூடாது?" என்றாள், அபிதா சற்று சூடான குரலில்.

பரமேஷ்வர் குறுகினார். இத்தனை நேரம் மகளைப் பார்க்க வேண்டும் என்று இருந்த துடிப்பும், அவளைப் பார்த்ததும் பொங்கி பிரவகித்த மகிழ்ச்சியும் புஸ்ஸென்று அடங்கி விட்டன. கண்களில் ஆத்திரம் பொங்க அவர் சந்திரமோகனைத் திரும்பிப் பார்த்தார்.

"என் மகளை என்னிடமிருந்து பிரிக்க என்ன சரி செய்தாய், சந்திரமோகன்?"

"சந்தர் என்ன செய்வான்? நீங்கள்தானே என்னைப் பிரித்து எறிந்துவிட்டீர்கள்! என் வயசு இருக்குமா இந்தப் பெண்ணுக்கு?"

"இவளுக்கென்ன அபிதா? இவள் பெயர் காதம்பரி. என் வக்கீல் தொழிலில் இவள் ஒரு க்ளையண்ட். அவ்வளவுதான்..."

"இவள் உங்களுக்குக் கிளையண்ட்டா? இவளுக்கு நீங்கள் க்ளையண்ட்டா?"

"அபிதா!"

"அபிதா காஸெட்டைப் பார்த்துவிட்டாள்" என்றான் சந்திரமோகன், அமைதியாக.

"அபிதா இவன் காட்டியது போலி காஸெட். என்னிடம் கூட காட்டினான். நம்பாதே, காதம்பரியும் இவனும் சேர்ந்து எனக்கு எதிராக ஏதோ சதி செய்கிறார்கள். இன்றைய கம்ப்யூட்டர்களை வைத்துக்கொண்டு எந்த முகத்துடன் வேண்டுமானாலும் எந்த முகத்தையும் சேர்க்க முடியும் என்பது உனக்குத் தெரியும்! என் முகத்தை வைத்துக்கொண்டு இவர்கள் செய்துள்ள தில்லுமுல்லு காஸெட் அது!"

"காஸெட்டை நான் எங்கே பார்த்தேன் என்று சொல்லவில்லையே, டாடி..."

"இங்கேயா?"

"யாருடன் பார்த்தேன் என்று சொல்லவில்லையே!"

"இந்தக் கழுதையுடனா?"

"வேண்டாம், அபிதா! இப்போது எதுவும் பேச வேண்டாம்..." என்றான், சந்திரமோகன்.

"இவள் பெயருக்கு இந்த கெஸ்ட் ஹவுஸை வாங்கிக் கொடுத்திருக்கும் பத்திரங்களில் எல்லாம் உங்களைப் போலவே சந்திரமோகன் கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்று சொல்லப் போகிறீர்களாப்பா?"

"அபிதா! இவன் உன்னை ரொம்பக் குழப்பியிருக்கிறான் என்று நினைக்கிறேன். எல்லாவற்றுக்கும் என்னால் விளக்கம் தர முடியும்... வா முதலில் இங்கிருந்து போகலாம்... இவன் உன்னைக் கடத்தி வைத்து என்னை மிரட்டி சில காரியங்களை சாதித்துக் கொண்டான். வற்புறுத்தி, மிரட்டி, உயிர்பயம் காட்டி அச்சுறுத்தி இவன் செய்த செயல்கள் செல்லாது என்று சட்டம் சொல்வது இவனுக்குத் தெரியாது..."

"மே ஐ கம் இன்?" என்ற குரல் கேட்டு அனைவரும் திரும்பினர். கிருஷ்ணதாஸ்!

அவரைப் பார்த்ததும், சந்திரமோகன் ஒரே பாய்ச்சலாக சோபாவின் பின்னே தாவினான். காதம்பரி மிரண்டு எழுந்தாள்.

"ராஸ்க்கல்... நீ எங்கே போனாலும் இன்று உன்னை விடப் போவதில்லை..." என்று கிருஷ்ணதாஸ் உறுமினார். கையில் துப்பாக்கியை எடுத்தார்.

"கிருஷ்ணா சார், வேண்டாம், வேண்டாம்..." என்று பரமேஷ்வர் பதறினார்.

"நீ பேசாமல் இருய்யா..." என்றார், கிருஷ்ணதாஸ் மிரட்டலாக, "நீ கண்டவளோடு கூத்து அடித்து காஸெட் எடுத்ததால்தானே இந்தப் பயலை நான் முதலில் விடுவிக்க வேண்டி வந்தது? அதற்கப்புறம் என்னென்ன நடந்து விட்டது பார்த்தாயா? டேய்... எழுந்திருடா..."

கிருஷ்ணதாஸ் ரிவால்வர் முனையை மேலும் கீழுமாக ஆட்டினார்.

சோபாவில் அமர்ந்திருந்த காதம்பரி அச்சத்தில் தப்பான காரியம் செய்தாள். துப்பாக்கி முனை பார்த்த திசையில் அவள் இருக்கக் கூடாது என்ற பதைப்பில் துப்பாக்கிக்கு நேரே கையை வீசி வீசி ஆட்டிக் கொண்டே 'வேண்டாம் வேண்டாம்' என்று ஓடி வந்தாள்.

கிருஷ்ணதாஸ் பதறினார். சந்திரமோகனுக்கு அவளும் உடந்தை என்பதால்தான் பரமேஷ்வர் பற்றி காஸெட் எடுக்க முடிந்தது; அதே காரணத்திற்காகத்தான் இந்த இடத்திற்கு போலீஸைக் கூப்பிட்டு சரணடைய திட்டம் வைத்திருக்கிறான் என்று அவர் முழுமையாக நம்பினார். ஆனால் சந்திரமோகனைக் காப்பாற்றுவதற்காக அவர் கவனத்தை திசை திருப்பவே அவள் அப்படி ஓடி வருகிறாள் என்று அவர் நினைத்துவிட்டார்.

வேகம், அவசரம், பதட்டம் எல்லாமாகச் சேர்ந்து கொண்டன. கூடவே தோற்றுப் போய்விடக் கூடாதே என்ற பரபரப்புட்ம தொற்றிக் கொள்ள, எந்த யோசனையும் செய்யாமல் ரிவால்வரின் விசையை இழுத்துவிட்டார்.

'குபுக்' என்று தோட்டா விடுபட்டது. அடுத்த நொடி.... காதம்பரி பிரேக் அடித்தது போல் நின்றாள். அவள் விழிகள் பெரிதாய் விரிந்தன. ரவிக்கையையும் புடவையையும் மீறி நெஞ்சுப் பகுதியில் சிகப்பாய் ரத்தப்பூ பூத்தது. அப்படியே கீழே அவள் சரிந்தாள்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும், கிருஷ்ணதாஸின் அடியாட்கள் உடனே அங்கு பிரசன்னமாயினர். கிருஷ்ணதாஸ் அலட்சியமாக அவர்களை விலகச் சொன்னார்.- ரிவால்வரை ஆட்டி. உடனே அவர்கள் புகை போல் மறைந்தார்கள். காதம்பரி கண்ணெதிரே சுருண்டு விழுந்ததைப் பார்த்ததும் - அபிதா அரண்டு போனாள். பரமேஷ்வர் பாய்ந்து அவளை ஒரு மறைவிடத்திற்குத் தள்ளினார்.

கிருஷ்ணதாஸ் இரண்டடி எடுத்து வைத்து சந்திரமோகனை நெருங்கி விட்ட நிலையில் -

அபிதா தன் அப்பாவை உதறிவிட்டு அவரிடமிருந்து ஒரே திமிறலாய்த் திமிறித் தப்பித்து, கிருஷ்ணதாஸின் மீது பின்புறமிருந்து பாய்ந்தாள்.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

# ~ இருபத்தைந்து ~

**அ**பிதா பாய்ந்த வேகத்தில் கிருஷ்ணதாஸ் குப்புறடித்து விழுந்தார். அவர் கையிலிருந்து ரிவால்வர் எகிறியது. தரையில் வழுக்கி சோபாவுக்கு அடியில் சென்று மறைந்தது.

சந்திரமோகன் தாவிக் குதித்து கிருஷ்ணதாஸின் அருகில் வந்து இறங்கினான். அவர் காலரைப் பிடித்து நிமிர்த்தினான். அவன் கண்களில் அனல் பறந்தது.

"அன்றைக்கு மல்லையாவை என் கண்ணெதிரில் கொன்றீர்கள்... இன்றைக்கு காதம்பரியை... மனித உயிர்கள் உங்களுக்கு அவ்வளவு மலிவாகப் போய்விட்டதா?"

நடப்பதையெல்லாம் பார்த்து பரமேஷ்வர் கலவரம் அடைந்தார். அவசரம் அவசரமாக வாசல் கதவை சாத்தி இரண்டு தாழ்ப்பாள்களையும் போட்டார்.

"இன்னும் உங்கள் புத்தி மாறவில்லை. சென்ற முறை கொலை செய்து தப்பி விட்டீர்கள்... இந்த முறை போலீஸ் வரும்போது நீங்கள் தப்ப நான் விடப் போவதில்லை..." - கிருஷ்ணதாஸின் இரு கைகளையும் சந்திரமோகன் முறிப்பது போல் புரட்டி முதுகுப் பக்கம் வைத்து கட்டப் பார்த்தான்.

கிருஷ்ணதாஸ் திமிறித் திரும்பினார். அவர் வயதுக்கு அபார வேகம். திரும்பிய வேகத்தில் அவர் கையில் கூர்க் கத்தி இடம் பெற்றிருந்தது. அதை அவர் வீசிப் பாய்ச்சினார். மிகக் கடைசி தருணத்தில் சந்திரமோகன் முகத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்ட போதிலும் கத்தியின் கூர்முனை அவனுடைய முகவாயில் ஒரு நீளமான கீறல் போட்டது.

"உன் முகத்தை துண்டம் துண்டமாகக் கிழிக்காமல் விடமாட்டேன்..." கிருஷ்ணதாஸ் கத்தியை மறுபடி சீவினார். சந்திரமோகனின் கழுத்தை மில்லிமீட்டர் இடைவெளியில் கத்தி தவறவிட்டது-

சந்திரமோகனின் கைகளை அவர் அழுத்திப் பிடித்திருந்த வேகத்தில் அவன் கண்களின் முதன்முறையாக ஒரு அச்சம் வந்தது. அவன் திமிறினால் நிச்சயம் அவருடைய கத்தி அவன் முகத்தை சிதைத்து விடும் அபாயம் இருந்தது. சந்திரமோகன் சரேலென அவரை நெம்பித் தள்ளப்பார்க்க,

கிருஷ்ணதாஸ் அதிக ஆத்திரத்துடன் கத்தியை முழு வேகத்தில் அவன் மீது செலுத்த முயற்சி செய்து கையை ஓங்க - ரிவால்வர் வெடித்தது.

கிருஷ்ணதாஸின் ஓங்கிய கை ஓங்கியபடி நின்றுபோனது. அவர் கையிலிருந்த கத்தி விரல்களிலிருந்து பிடிப்பு இழந்து நழுவியது. அவருடைய வெறித்த விழிகளில் ஒரு திடுக்கிடல் தெரிந்தது.

கழுத்தின் பக்கவாட்டிலிருந்து ரத்தம் குமுறி வந்தது. சந்திரமோகன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கிருஷ்ணதாஸின் கையிலிருந்து விடுபட்டு சோபாவுக்கடியில் ஓடியிருந்த துப்பாக்கியை இரண்டு கையாலும் பிடித்து நின்றிருந்தாள் அபிதா!

சந்திரமோகன் கிருஷ்ணதாஸைப் புரட்டிவிட்டு எழுந்தான்.

"என்ன காரியம் செய்தாய் அபிதா!" என்று பரமேஷ்வர் அலறிக் கொண்டு அவளை நெருங்கிய நேரம், சந்திரமோகன் மறுபுறமிருந்து அவள் மீது மோதினான். அபிதாவின் கையிலிருந்து ரிவால்வரை சந்திரமோகன் பறித்தான். சட்டை நுனியால் அதில் பதிந்திருந்த கைரேகைகளை அவன் துடைத்தான்.

வாசல் கதவு படபடவென்று தட்டப்பட்டது. சந்திரமோகன் பரமேஷ்வரையும் அபிதாவையும் இழுத்துக்கொண்டு அடுத்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டான். கிருஷ்ணதாஸை சுட்ட துப்பாக்கியை இரு கைகளாலும் பற்றி அதை பரமேஷ்வரின் நெஞ்சுக்கு நேரே உயர்த்தினான்.

"சந்தர்" - அபிதா பதறினாள்.

சந்திரமோகன் புன்னகைத்தான். ரிவால்வரைத் தழைத்தான். அவன் முகத்து ரத்தத்தை அலட்சியம் செய்தான். "பயப்படாதே! நான் அவரை சுடப் போவதில்லை..." என்றான்.

பரமேஷ்வர் ரத்த அழுத்தம் உச்சத்தில் இருக்க அவனை நிமிர்ந்து பார்த்தார். சந்திரமோகன் பரபரப்பான குரலில் பேச ஆரம்பித்தான்.

"நன்றாக கவனித்துக் கேட்டுக் கொள்ளுங்கள்... கிருஷ்ணதாஸிற்கும் எனக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அவர் என்னைக் கத்தியால் கிழித்தார். அந்த ஆத்திரத்தில் அவருடைய துப்பாக்கியாலேயே அவரை நான் சுட்டு விட்டேன்... போலீஸில் இதைத்தான் நாம் சொல்லப் போகிறோம்..."

"நோ!" என்றாள், அபிதா. "கிருஷ்ணதாஸை விட்டிருந்தால் நிச்சயம் அவர் உன்னைக் கொலை செய்திருப்பார். அதனால்தான் நான் சுட்டேன்... ஏற்கனவே சிறை சென்றவன் நீ. மறுபடியும் ஏன் வீணாக செய்யாத குற்றத்திற்காக சிறைக்குப் போக வேண்டும்?"

"அபிதா!" சந்திரமோகன் அவளை உலுக்கினான். "என் வாழ்க்கை ஒரு நிறுத்தத்திற்கு வந்துவிட்டது. உன் வாழ்க்கை இப்போதுதான் துவங்கியிருக்கிறது... மல்லையாவின் தொழிற்சாலை தொழிலாளிகளுக்குப் போக வேண்டும் என்று நான் நினைத்தேன். அது நிறைவேறிவிட்டது... நீ வெளியே இருந்தால்தான் சில காரியங்களை எனக்காக சாதிக்க முடியும்... தயவு செய்து நான் சொல்வதைக் கேள்..."

சந்திரமோகன் பரமேஷ்வரின் பக்கம் கோபமாகத் திரும்பினான். "நான் சொல்வது உங்களுக்காவது புரிகிறதா?"

பரமேஷ்வர் மெல்ல தலையை மேலும் கீழுமாக அசைத்தார். சந்திரமோகனின் கோபம் அவன் முகத்திலிருந்து காணாமல் போனது.

"சென்றமுறை மல்லையாவை நான்தான் கொலை செய்தேன் என்று பிடிவாதமாக பொய் சொல்லிச் சாதிக்கிறீர்களே... அதைவிட சிறப்பாக இந்தமுறை நீங்கள் கோர்ட்டில் வாதாட வேண்டும்... கிருஷ்ணதாஸைக் கொலை செய்தது சந்திரமோகன்தான் என்று அழுத்தம் திருத்தமாக நிரூபிக்க வேண்டும்... உங்கள் திறமையையெல்லாம் இந்த வழக்கில் காட்டுங்கள்..."

பரமேஷ்வர் கண்களில் கண்ணீருடன் சந்திரமோகனின் கைகளைப் பற்றிக் கொண்டார். வாசல்கதவு ஓங்கி இடிக்கப்படும் ஒலி தொடர்ந்தது.

"டி.எஸ்.பி. நண்பரைக் கூப்பிடுங்கள்" என்றான் சந்திரமோகன். பரமேஷ்வர் அவசரம் அவசரமாக செல்போனை எடுத்தார்.

* * *

பரமேஷ்வரின் வீடு, இரவு, மாடியறை.

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

"எத்தனை ஆயிரம் விளக்கங்கள் நீங்கள் கொடுத்தாலும் எத்தனை லட்சம் சமாதானம் சொன்னாலும் இனிமேல் நீங்களும் நானும் பழைய பாசத்தோடு அப்பா மகளாகத் தொடர முடியாது" என்றாள் அபிதா, தீர்மானமாக.

"அபிதா ப்ளீஸ்" - பரமேஷ்வர் அவளைக் கெஞ்சும் பார்வையில் வருடினார். "அத்தனை சந்தோஷத்தையும் நாம் இழக்க வேண்டுமா?"

"உண்மையிலேயே நான் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அம்மாவிடம் நேர்மையாக இருங்கள்... அம்மாவிற்கு துரோகம் செய்ய இன்னொரு முறை முயற்சி செய்யாதீர்கள்..."

"செய்ய மாட்டேன்... உன் மேல் சத்தியம்..."

"குற்றத்தை ஒப்புக் கொண்டு நான் போலீஸில் சரணடையக் கூடாது என்றால் இன்னொரு நிபந்தனை."

"என்ன?"

"நீங்கள் அப்ரூவராக மாற வேண்டும்... கிருஷ்ணதாஸின் அத்தனை உண்மைகளையும் சட்டத்திற்கு முன் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்..."

'செய்கிறேன்..."

"என் மேல் சத்தியம்?"

"உன் மேல் சத்தியம்..."

அபிதா அவரைப் பார்த்து வெகு நாட்களுக்குப் பிறகு புன்னகைத்தாள். "அப்ரூவராக மாறுவது மட்டுமல்ல... எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாதாடி சந்திரமோகனையும் இந்தக் குற்றத்திலிருந்து காப்பாற்ற முடியுமா என்று பார்ப்போம்..."

"தேங்க்யூ டாடி... அவனுக்குக் குறைந்த அளவு தண்டனை கிடைப்பதுதான் நல்லது. ஏனென்றால் அவன் சிறையிலிருந்து வெளியே விடுதலையாகி வரும் வரை அவனுக்காக நான் காத்திருப்பேன். அதை உங்களால் மாற்ற முடியாது... குட்நைட்."

அபிதா சரேலென்று தன் அறைக்குள் நுழைந்துவிட்டாள்.

பரமேஷ்வர் கண்களை மூடி சில விநாடிகள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டார். இந்த வழக்கிற்கான முக்கிய சட்டப் புத்தகங்கள் அவருக்காக அவர் மேஜை மீது காத்திருந்தன.

அந்த அறை சற்றே இருட்டாக இருந்தது. சந்திரமோகன் கல்சுவர் மீது சாய்ந்து அமர்ந்திருந்தான். கம்பிகள் சந்திக்கும் ஒலி கேட்டு நிமிர்ந்தான். அறை வார்டன்.

"உனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கிறது.." என்று ஒரு காகித உறையை உள்ளே வீசினார்.

சந்திரமோகன் அதைப் பிரித்தான். அது ஒரு வாழ்த்து அட்டை!

சூரிய உதயத்திற்காகக் காத்திருக்கும் தாமரை மொட்டு ஒன்று தன் கூம்பிய கரங்களால் வான் நோக்கி நிமிர்ந்திருப்பது போன்ற சித்திரம்.

சந்திரமோகன் வாழ்த்து அட்டையைத் திறந்தான்.

**காத்திருக்கிறேன்...**

**- அபிதா**

சந்திரமோகனின் உதடுகளில் மெல்ல மெல்ல ஒரு புன்னகை மலர்ந்தது.

**- முற்றும் -**

.................................................................


Become a part of the Tamil community and congregate. Join our Tamilian mailing lists.

Discuss...

**Art:** art-subscribe@lists.tamil.com
**Books:** books-subscribe@lists.tamil.com
**Business:** business-subscribe@lists.tamil.com
**Cinema:** cinema-subscribe@lists.tamil.com
**Education:** education-subscribe@lists.tamil.com
**Fun:** fun-subscribe@lists.tamil.com
**Health:** health-subscribe@lists.tamil.com
**IT:** it-subscribe@lists.tamil.com
**Law:** law-subscribe@lists.tamil.com
**Parenting:** parenting-subscribe@lists.tamil.com
**Politics:** politics-subscribe@lists.tamil.com
**Sex:** sex-subscribe@lists.tamil.com
**Sports:** sports-subscribe@lists.tamil.com
**Teen:** teen-subscribe@lists.tamil.com
**Women:** women-subscribe@lists.tamil.com

**www.tamil.com**

Read content anywhere. Discuss it at tamil.com - World's first congregatal!

## tamil.com ஒருங்கிணையக் குழு

**பாலா பிள்ளை**
தமிழுக்கு இணையத்தை அறிமுகப்படுத்தியவர். மோடத்துக்கு மவுஸ் வந்த காலத்திலேயே tamil.net மூலம் உலகத் தமிழர்களுக்கு இணையப் பாலம் அமைத்தவர்.

**இரா. சத்தியமூர்த்தி**
tamil.com ஒருங்கிணையத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் டெலிஇண்டியா நிறுவனத்தின் தலைமை வலைப் பந்தாளர் (Chief Netballer).

**ஆனந்த் நடராஜன்**
tamil.com-ன் தலைமை ஒருங்கிணையர் (Chief Congregator).

**திவாகர்**
tamil.com-ன் ஒருங்கிணையர்.

**www.tamil.com**